


# செங்காந்தள்

மலர் - 3, இதழ் - 2, வைகாசி 2055

# செங்காந்தள்

*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்*


### முதன்மை ஆசிரியர்

**முனைவர் ஜெ. கவிதா** எம்.ஏ., எம்.எட்., எம். பில்., பி.எச்.டி., நெட்., செட், எம்.எஸ்.சி (யோகா).
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,
கோயம்புத்தூர் - 641004, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: jkavitha@psgrkcw.ac.in
**பணியிட முகப்புப் பக்கம்:** https://psgrkcw.irins.org/profile/135958

### துணை ஆசிரியர்கள்

**முனைவர் செ. சாந்தி** எம்.ஏ., எம்ஃபில்., நெட்., செட், பிஎச்.டி.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி,
சிவகாசி - 626123, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: shanthi_sf607@anjaconline.org
**பணியிட முகப்புப் பக்கம்:**
https://anjaconline.org/Departments/Page/BATamil

**முனைவர் அ. பரணிராணி** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நா. ம. ச. ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி,
மதுரை- 625019, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: mahesparani@gmail.com
**பணியிட முகப்புப் பக்கம்:** https://nmssvnc.edu.in/academics/departments/department-of-tamilaided/

### ஆசிரியர் குழு

**முனைவர் (திருமதி) எஸ். கேசவன்** பி.ஏ., எம்ஃபில்., பி.எச்.டி.
தலைவர், இந்து நாகரிகத்துறை,
சிரேஷ்டவிரிவுரையாளர், கலைத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
மின்னஞ்சல்: kesavans@esn.ac.lk
**பணியிட முகப்புப் பக்கம்:**
https://www.fac.esn.ac.lk/hindu-civilization/academic-staff/s-kesavan

**முனைவர் மு. சுதா** எம்.ஏ., பிஎச்.டி.
பேராசிரியர், தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630003, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: sutham@alagappauniversity.ac.in
**பணியிட முகப்புப் பக்கம்:**
https://alagappauniversity.ac.in/modules/Academics/faculty-of-arts/school-of-languages/Department-of-Tamil.php#tabs-1

**முனைவர் ஹெப்சி ரோஸ் மேரி** எம்.ஏ., பிஎச்.டி.
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம் - 695034,
கேரளா, இந்தியா.
மின்னஞ்சல்: hepsy@keralauniversity.ac.in
**பணியிட முகப்புப் பக்கம்:**
https://www.keralauniversity.ac.in/dept/staff-Details

**முனைவர் மம்தா** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டெல்லி பல்கலைக்கழகம்,
டெல்லி - 110007, இந்தியா.
மின்னஞ்சல்: jnu.mamta@gmail.com
**பணியிட முகப்புப் பக்கம்:**
http://www.du.ac.in/uploads/du/Faculty%20CV/Linguistics/Linguistics_Mamta.pdf

**முனைவர் த. மகேஸ்வரி** எம்.ஏ (தமிழ்)., எம்.ஏ (ஆங்கிலம்)., எம்ஃபில்., செட்., பி.லிட்., டி.ஜி.டி. பிஎச்.டி.
பாண்டியன் கல்வி அறக்கட்டளை,
விருதுநகர் – 626001, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: president@pandianeducationaltrust.com
**பணியிட முகப்புப் பக்கம்:**
http://pandianeducationaltrust.com/trustees.html

**பதிப்பாசிரியர் குழு பணி விவரம்/ Editorial Work Flow Details**

இந்த இதழ் குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல், கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

This issue committee curated the scholarly articles with ethical princples according to the norms of the Editorial work flow. It contains of submission, plagiarism check, correction, peer review process, (Double Blind), major corections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

## Title Verso


**Journal title** : **Chenkaantal**
**Editor Name** : **Dr. J. Kavitha**
**Publication frequency** : **May and November**
**Volume/Issue** : **Volume 3 Issue 2**
**Place of Publication** : **Virudhunagar**
**Date of Publication** : **May 2024**
**Paper Size** : **Digital A4 Size**
**Medium of Publication: E-version**
**Access Type (URL or DOI): Diamond OA, Online, Indexed long time in Internet Archive**
**Subscription Type** : **Non-APC**
**Publisher** : **Pandian Educational Trust**
**Publisher Website** : **https://pandianeducationaltrust.com/**
**Journal Site** : **http://pandianeducationaltrust.com/-chenkaantal.html**

பதிப்பகத்தார்:

**பாண்டியன் கல்வி அறக்கட்டளை (TN-32-0003213)**

**மகேஸ்வரி பப்ளிசர்ஸ், (பாண்டியன் கல்வி அறக்கட்டளையின் வெளியீட்டுப் பிரிவு)**

3-350, கால்நடை மருத்துவமனை பின்புறம்,

விருதுநகர் – 626001, தமிழ்நாடு, இந்தியா.

**Mobile:** +91 8526769556
**E-mail id:** chenkaantal@pandianeducationaltrust.com



காப்புரிமை © 2024 – கட்டுரையாளருக்கே

**செங்காந்தள்** சிசி பிஓய் கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0 இன்டர்நேசனல் உரிம http://Creativecommons.org//license/by/4.0/. பயன் கொண்டுள்ளது. இது உண்மையான படைப்புக்களை தகுந்த முறைகளுடன் பயன்படுத்த, விநியோகிக்க மற்றும் மீட்டு உருவாக்கம் செய்ய அனுமதிக்கிறது.

## வெளியீட்டாளர் செய்தி

### குறிக்கோள்

***செங்காந்தள்*** **(E-ISSN: 2583-0481)** அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ் ஆகும். இவ்விதழ் வருடத்திற்கு இரண்டு முறை கார்த்திகை (நவம்பர்) மற்றும் வைகாசி (மே) மாதங்களில் மகேஸ்வரி பதிப்பகத்தால் (பாண்டியன் கல்வி அறக்கட்டளை) வெளியிடப்படுகிறது. மேலும், ஆராய்ச்சியை வளர்ப்பதற்காக ஆங்கில ஆய்வுகள் மற்றும் கோவில் ஆய்வுகளுக்கான இதழ்களை வெளியிடும் பணியைச் செய்து வருகிறது. இவ்விதழ் கல்வியாளர்கள் மற்றும் அறிஞர்கள் ஆராய்ச்சியை மின் வெளியீடு மூலம் ஊக்குவித்து வருகிறது. உலகமயமாக்கப்பட்ட ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வது, அறிஞர் சமூகத்திற்கு ஆய்வு வெளியீடுகளின் மூலம் ஆராய்ச்சியில் அறிவார்ந்த நிலையை வளர்க்க உதவுகிறது. இணையத்தில் கல்வி ஆராய்ச்சியில், திறந்த நிலை அணுகல், உலகின் மேம்பாட்டிற்கு சாதகமான விளைவுகளை உருவாக்கும் என ஊக்குவித்தும் வருகிறது.

### பொறுப்புத்துறப்பு அறிக்கை

***செங்காந்தள்*** ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பின்பற்றி ஆராய்ச்சி செய்வதில் உறுதியாக உள்ளது. கருத்துத் திருட்டை ஒரு குற்றமாகக் கருதுகிறது. ஆய்வாளர்கள் மற்ற படைப்புகளிலிருந்து மேற்கோள்களை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பாக சிறந்த கல்வி நெறிமுறைகளைக் கடைபிடிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். தங்கள் படைப்பில் கருத்துத் திருட்டு தொடர்பான எந்தவித பிழைகளுக்கும் வெளியீட்டாளர் மற்றும் பதிப்பாசிரியர்கள் பொறுப்பேற்க மாட்டார்கள். உங்கள் ஆய்வுக்கட்டுரையை ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பின்பற்றி முறையான படைப்பாகச் சமர்பிக்கும் பொழுது ஒப்புக்கொள்ளும் படிவம் இணைந்து இருக்க வேண்டும். மேலும், வேறு எந்த ஆராய்ச்சி நோக்கத்துக்காகவும் வெளியிடப்படவில்லை என்று உறுதி அளிக்க வேண்டும். எந்தவொரு சட்ட சிக்கல்கள் மற்றும் குறைபாடுகளுக்குக் கட்டுரையாளர் மட்டுமே பொறுப்பு. சமர்ப்பிப்பு மற்றும் பிற தகவல்களுக்கு chenkaantal@pandianeducationaltrust.com ஐ தொடர்பு கொள்ளவும். வழிகாட்டுதல்களுக்கு http://pandianeducationaltrust.com/journals.html ஐப் பார்க்கவும்.

**பதிப்பகத்தார்**

### தலைமையாசிரியர் செய்தி

*செங்காந்தள்* என்பது தமிழ் சார்ந்த ஆராய்ச்சிகளை மேம்படுத்த உருவாக்கப்பட்ட மின்ஆய்விதழாகும். உலகெங்கிலும் உள்ள அறிஞர்கள் மற்றும் மாணவர்களிடம் இருந்து அவர்களின் அறிவார்ந்த கருத்துக்களால் கல்வி நிலை மற்றும் சமுதாயத்தின் நிலையை முன்னேற்ற நல்ல ஆய்வுப்படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. கல்வி உலகில் ஒரு பெரிய களத்தை உருவாக்க ஆராய்ச்சி தீவிரமாக இருக்க வேண்டும். ஆராய்ச்சி என்பது உண்மைகளை நிலைநிறுத்துவது, ஆதாரங்களை உறுதிப்படுத்துவது, முந்தைய படைப்புகளை மறுசீரமைப்பது மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பது ஆகும். கல்வி ஆராய்ச்சி மூலம் கல்விச் சீர்திருத்தங்களுக்கான நெறிமுறைகளை ஏற்படுத்தி வழங்குவதும் முறையான அணுகுமுறையை ஏற்படுத்துவதும் இவ்விதழின் மைய நோக்கமாக மாறியுள்ளது. இந்த இதழில் ஐந்து படைப்புகளை ஆராய்ச்சி ஆய்வுலகிற்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**முனைவர் ஜே. கவிதா**

# பொருளடக்கம் / Contents


| வ.எண்<br>S.No | தலைப்பு / பெயர்<br>Title / Author Name | பக்க எண்<br>Page No. |
|---|---|---|
| 1 | தமிழ் அற இலக்கியங்களில் துறவற நெறிகள்<br>Rules of Asceticism in Tamil Didactic Literature<br>ர. திவ்யபாரதி / R. Divyabharathi<br>முனைவர் பி.எல். செல்வராணி / Dr. P. L. Selva Rani | 1 - 07 |
| 2 | சங்க காலத்தில் வாழ்ந்த தலைவன் தலைவியின் அன்பின் வெளிப்பாடு<br>Expression of Love of the Lover and Beloved lived in the Sangam Period<br>முனைவர் ச. பிரபாகரன் / Dr. S. Prabakaran | 08 - 14 |
| 3 | *துர்வை* புதினம் காட்டும் அடித்தள மக்களின் வாழ்வியல் நெருக்கடிகள்<br>Life and Crises of the Lower Stratum People in the Novel *Thurvai*<br>திருமதி கி. முருகலட்சுமி / Mrs. K. Murugalakshmi<br>முனைவர் சு. பரணி / Dr. S. Bharani | 15 - 25 |
| 4 | சங்கப் பாடல் வரிகளுடன் தொல்லியல் பொருள்கள் – ஒரு பொருத்தப்பாடு<br>A Study of Archaeological Artifacts in Comparison to Sangam Lyrics<br>முனைவர் அ. இராஜலட்சுமி / Dr. A. Rajalakshmi | 26 - 39 |
| 5 | ஒப்பியல் நோக்கில் பெரியார் மற்றும் இங்கர்சாலின் சமூகச் சிந்தனைகள்<br>A Comparative Study on the Social Thoughts of Periyar and Ingersoll<br>முனைவர் இரா. ஜெய்சங்கர் / Dr. R. Jaisankar | 40 - 53 |

**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 3, Issue - 2, May 2024** **E-ISSN: 2583-0481**

# Rules of Asceticism in Tamil Didactic Literature

**R. Divyabharathi,** PhD Researcher of Tamil, Reg. No. BDU2110632779055, Thanthai Hans Roever College, Perambalur, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0006-4512-528X**
**Dr. P. L. Selva Rani,** Assistant Professor of Tamil, Thanthai Hans Roever College, Perambalur, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0006-5046-8092**
**DOI: 10.5281/zenodo.11552475**
**Received:** 29 January 2024; **Revised:** 15 February 2024; **Accepted:** 22 March 2024; **Available Online:** 30 May 2024.

## Abstract

*The state of complete renunciation of human desires is called virtue in Tamil culture. Ascetics should change their activities as monks from familial bonds by strong will and piety. They should completely give up feelings like desire, affection, and attachment to any group. Indeed, the state of liberation that changes from non-existence is greatly talked about in the life of an ascetic monk. The highest value of ascetics is the one who regrets himself for all errors and asks only for the good of worldly beings. Ascetics are people who have a high quality of seeing all life together without leaning on any side. The high concept of being ready to give up anything at any time is the sole concept in Tamil cultural tradition. Although, asceticism is inherently challenging but rewarding at the end of life and to end karma according to Tamil scriptures. Even Hinduism does not direct asceticism in everyday life, it acknowledges its significance in merging the soul with God. In contrast, Jainism prescribes ascetic practices during specific months. Ascetics are expected to conduct themselves as monks, embodying certain qualities and practices and should engage in penance for worldly benefits, observe fasting, understand the implications of life, and the concept of impermanence and share this understanding with others. They must renounce lust for women, gold, and land and have to suppress the five senses, abstain from non-vegetarian foods, and liquor and remain indifferent to concerns about their body and appearance. Such a sort of discipline and values upheld by ascetics are admired and regarded as exemplary by others in Tamil culture and have been seen in the didactic works of Tamil literature. Hence, this article seeks to explain these ascetic values through the references from Tamil literature.*

**Keywords:** Didactic Literature, Renunciation, Moral State, Life, Tamil Culture.

## References

[1] K.P. Aravaanan. *Ara Elakkiyak Kalanjiyam.* Sradha Pathipagam, Chennai -14, 2010.
[2] M. Arunachalam. *Tamil Elakkiya Varalaru*. Veman Pathipagam, Chennai, 2012.
[3] Singaravelu Mudhaliyar. *Abithana Sinthamani*. Jaganna Nagar, Chennai -600049.
[4] *Madhurai Tamil Peragarathi*. Meenatchi Puthaga Nilaiyam, Madhurai.
[5] Dhevaneyapavanar. *Tamizhar Varalaru*. Then Tamil Pathipagam, Salem, 1981.
[6] Mu.Varadharasanar. *Aramum Arasiyalum.* New Senjuri Book Havus, Chennai, 2004.
[7] Thirulogaseetharam. *Manunithi.* Thenindia Saiva Siththantha Noorpathippu Kazhagam, 1962.
[8] *Asceticism*. https://ta.wikipedia.org/wiki/ Accessed on 25 March 2024.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் - 3, இதழ் - 2, வைகாசி 2055 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தமிழ் அற இலக்கியங்களில் துறவற நெறிகள்

**ர. திவ்யபாரதி,** தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: BDU2110632779055, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி, பெரம்பலூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0006-4512-528X**
**முனைவர் பி.எல். செல்வராணி,** உதவிப்பேராசிரியர், தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி, பெரம்பலூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0006-5046-8092**
**DOI: 10.5281/zenodo.11552475**

**ஆய்வுச் சுருக்கம்**

*மனிதனின் ஆசைகளை முற்றும் துறந்த நிலை அறநிலை எனப்படும். துறவறம் மேற்கொள்வோர் அறவோராகத் தமது செயல்பாடுகளை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.ஆசை, பாசம், பற்று போன்ற உணர்வுகளை முற்றும் அளிக்க வேண்டும். இல்லறத்தாரில் இருந்து மாற்றியமைக்கும் முக்திநிலை பெரிதாக பேசப்படும் என்பது உண்மை.தன்னை வருத்திக்கொண்டு உலக உயிர்களுக்கு நன்மை வேண்டுபவர் என்பது துறவறத்தாரின் உயர்ந்த மதிப்பாகும். துறவறத்தார் எந்த பக்கமும் சாயாமல் எல்லா உயிர்களையும் ஒன்றாக பார்த்தல் என்ற உயரிய பண்பினை கொண்டவர்கள் ஆவர்.துன்பமில்லாத வாழ்வு வாழ வேண்டுமெனில் எந்த நேரத்திலும் எந்தப்பொருளையும், துறக்க தயாராக இருக்க வேண்டும் என்ற உயரிய கருத்தினை துறவறச் சிந்தனைகளில் இருந்து அறிய முடிகின்றது. இவை போன்ற பல்வேறு கருத்துக்களை இங்ஙனம் காண்போம்.*

**குறிப்புச் சொற்கள்:** அற இலக்கியம், துறந்த நிலை - அறநிலை, வாழ்க்கை, தமிழ்ப் பண்பாடு.

**முன்னுரை**

துறவறம் என்பது கடினமானது அதேசமயம் மகிழ்வினை தரக்கூடியது இந்து மதம் வலியுறுத்தும் மனித வாழ்வில் துறவறம் கட்டாயமானதில்லை. ஆனால் சமண மதம் போன்ற ஒரு சில மதங்களில் துறவறம் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. துறவறம் மேற்கொள்வோர் அறவோராகத் தமது செயல்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். உலக நன்மைகளுக்காகத் தவம் இயற்றல், நோன்பிருத்தல், உயிர்க்கொலை புரியாதிருத்தல், நிலையாமையை உணர்தல் மற்றும் பிறருக்கு உணர்த்தல், பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசைகளை அடியோடு விட்டுவிடுதல், தனக்கு என எதையும் தேடாத பண்பினைக் கொண்டிருத்தல், ஐம்புலன்களை அடக்குதல், புலால் உண்ணாதிருத்தல், உடல் மற்றும் அழகின் மீது கவலையற்று இருத்தல் ஆகிய பண்புகளைக் கொண்டவர்களாகத் துறவறம் மேற்கொள்வோர் இருக்க வேண்டும். அவர்களது செயல்பாடு போற்றப்படுவதோடு அதுவே

மதிப்பாக மற்றவர்களுக்கு உணர்த்தப்படும் தகுதி பெற்றவையாக மாறிவிடும். அத்தகைய துறவறம் மதிப்புகள் பற்றி அறநூல்களின் வழி விளக்குவதை இக்கட்டுரை நோக்கமாக கொண்டுள்ளது.

**துறவு**

துறவு என்பது ஆசை, பாசம், பற்று ஆகியவற்றை விடுதலும் உலக இன்பங்களின் மேல் நாட்டமின்றி வாழ்தலுமாகும். துறவி என்பவர் தூய்மையானவர் என்ற அளவில் வாழத்தக்கவராவர். பற்றை அறுத்தவர் என்பதால் அவர்களுக்கு இவ்வுலக இன்ப துன்பங்கள் பொருட்டல்ல. பசி நோக்காமல், கண் துஞ்சாமல் மறுமை ஒன்றையே எண்ணியவராக அவர்களது செயல்பாடுகள் அமையும் இதனை,

**யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன் (குறள்-341)**

என்ற குறள் கூறும் கருத்து துறவியின் தன்மையைக் காட்டுகின்றது. உலகப் பற்றுக்களை விட்டு நீங்கிய ஒருவருக்கு உலகத்தில் நிகழும் நிகழ்வுகளால் எத்தகைய பாதிப்புகளும் வருவதில்லை. அவர்கள் **செத்தாரைப் போன்று** தமது செயல்பாட்டினைக் கொண்டவர்களாக இருப்பார்கள். மற்றவர்களின் வாழ்விற்காகத் தியாகம் செய்வதோடு, வழிபாடுகளை மேற்கொள்வர் என்பது இவர்களுக்கான மதிப்பினைப் பெற்றுத் தருவதாகும்.

**துறவறம் விளக்கம்**

இல்லறத்தினால் பெற்ற மாண்புகளைவிடத் துறவறத்தால் அடையும் முக்தி பெரிதாகப் பேசப்பட்டது. இதில் மாறுபட்ட கருத்துக்களும் உண்டு. இல்லறத்தாருக்கு ஏதாகினும் பற்று இருக்கும். ஆனால் துறவறத்தார் நான் எனது என்ற சிந்தனையை மறுத்து பொதுவாழ்விற்காக வாழ்பவர் என்பதோடு தன்னை வருத்திக்கொண்டு உலக உயிர்களுக்கு நன்மை வேண்டுபவர் என்பது துறவரத்தாரின் மதிப்பாகும்.

**துறவறம் மிக உயர்த்திப் பேசப்பெற்றது என்பது உண்மை. மானுட வாழ்க்கையை தன்னை மட்டுமே வைத்து நோக்கும் சுயநல நோக்கில் இருந்து பிரிந்து மற்றவர்களைப் பற்றி கவலைப்படும் துறவு வாழ்க்கையை உயர்த்திப் பாராட்டும் நெறி சைவ, பௌத்தத்தால் நாடு எங்கும் பரவி நிலைப்பெற்றது.**

**சிற்சில இடங்களில் துறவியரின் ஆதிக்க வாழ்க்கை இருந்திருக்கலாம் என்றாலும், அவர்களும் நெறியோடு வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கப்பெற்றது. வற்புறுத்த பெற்றது சங்ககாலச் சமுதாயத்தைப்போர் வீரர் சமுதாயம், காதல் சமுதாயம் என்று கருதினால், சங்கம் மருவிய கால சமுதாயத்தை துறவியர் சமுதாயம், தொண்டர் சமுதாயம் என்று அழைக்கலாம். துறவு வாழ்க்கையில் துறவறம் உயர்த்திப் பேசப்பட்ட அதே சமயத்தில் இல்லற வாழ்க்கை நெறியும் உயர்த்தி பேசப் பெற்றது. துறவியர்க்கு இல்லறத்தார் உதவ வேண்டும். உணவு இடவேண்டும், துறவியல் பள்ளியில் அமர்ந்து**

**படிப்புச் சொல்லித் தர வேண்டும். பொது நிகழ்ச்சியில் தொண்டாற்ற வேண்டும் எனும் அமைப்பால் இல்லறத்தார் துறவறத்தார் இடையே ஒத்திசைந்த வாழ்வு உருவாக்க பெற்றது. (அற இலக்கியக் களஞ்சியம், ப. 34)**

இதனால் இல்லறத்தாரும், துறவறத்தாரும் தத்தமது அறநெறி அறிந்து சமுதாய கடமையாற்றுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. இவ்வுலக வாழ்வை வலியுறுத்திய நிலைகள் சற்றுமாறி மறுமை உலகம் பற்றிய எண்ணங்கள் உருவாகின.

**இம்மை -மறுமை, இவ்வுலகம்- அவ்வுலகம் பற்றிய எண்ணங்கள் தமிழர்களிடம் இருந்தன என்றாலும் நாற் பொருள் என்னும் பாகுபாடு திருஞானசம்பந்தர் பாடலில் தான் தமிழ் இலக்கியக் காலப்பாதையில் முதன்முதலாக காணப்படுகின்றது. (தமிழ் இலக்கிய வரலாறு, ப. 1)**

அறம் பொருள் இன்பம் என்ற மூன்று பொருட்களையும் கடந்து வீடுபேறு என்ற சிந்தனைகள் உருவானதன் பின்னணியில் சமயப் பரப்பல் என்ற கொள்கை உள்ளதையும் மறுத்து விட முடியாது.

**இல்லறம் கொடுத்தலும் மளித்தலும் கோடலும், இன்மையும், ஒழுக்கம் புணர்தல், புணந்தோர்ப் பேணல் மற்றையவுமாம் துறவறமாவது துறவும் அடக்கவும் தூய்மையும், தவமும் அறவினையோம் பலும், மறவினை மறுத்தலும் பிறவுமாம். (அபிதான சிந்தாமணி, ப. 108)**

என்று கூறும் விளக்கம் இல்லறம் துறவறம் என்றால் என்ன என்பதற்கான அடிப்படைகளை விளக்குகின்றது. **துறவறம் என்பது இல்லறந்துறத்தல் (மதுரை தமிழ்ப் பேரகராதி, ப. 1134)** எனப் பொருள் கூறுகின்றது.

**இல்லற இன்பத்தைத் துயித்தறியாதும், துயித்தும் உலக வாழ்க்கையில் அல்லது பிறவித் துன்பத்தில் வெறுப்பும் அல்லது பேரின்ப துய்ப்பின் வேட்கையும் கொண்டு மானிடப் (பிரமசாரிய) பருவத்திலேனும் மனையற நிலையிலேனும், முறியன் (தபுதாரன்) நிலையிலேனும், மூப்பிலேனும் துறவு பூண்டு அதற்குரிய அறங்களைக் கடைப்பிடித்து நான் எனது என்னும் இருவகைப் பற்றையும் விட்டுப் பிறவியின்று விடுதலை பெறுவது துறவு ஆகும். (தமிழர் வரலாறு, ப. 155)**

**தனிமனிதனுக்கு அறத்தின் சிறப்பை எடுத்துச் சொல்லி ஆசையை அகற்றச் சொல்வது காலால் நடந்து குறித்த இடத்தை அடையச் சொல்வது போன்றது.காலால் நடப்பதால் தவறியோ, இடறியோ விழ நேராது. விழுந்தாலும் பெரிய அடிபடாது. வண்டி ஏறும் ஆசையை விட்டொழிந்தால் வண்டியால் வரும் துன்பமும் தொல்லையும் அகலும். ஆகையால் காலால் நடந்து போவது நன்மை உடையது தான். குடும்பப்பற்றையும் மற்றச் சூழ்வுத் தொடர்களையும் விட்டு துறவியாய்த் தனியே வாழ்ந்து அறநெறி போற்றி உயரும் வாழ்வும் இப்படிப்பட்டதுதான். பழங்காலத்தில்**

**சான்றோர் பலர் குடும்ப வாழ்க்கையிலும் மற்ற துறைகளிலும் வரும் இடுக்கண் பலவற்றையும் எண்ணி பற்றற்ற வாழ்க்கை வாழ, துறவறத்தை வற்புறுத்தினார்கள் .நல்ல வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே வாழ்க்கையின் அதிர்ச்சிகளை வறுமை, மூப்பு, மரணம் என்பவற்றைக் கண்டு நடுங்கி வாழ்க்கையே வெறுத்தார்கள். (அறமும் அரசியலும், ப. 58)**

என மு. வரதராசனார் கூறுவது துறவறத்தாரின் செயல்டுகளைத் தெரிவிப்பதாகும்.

**இலக்கியங்களில் துறவறம்**

துறவறம் என்பது மனிதனுக்கு இயல்பாகத் தோன்றும் உடல், உள்ளம் சார்ந்த தேவைகள் அனைத்தையும் நிராகரிப்பது, ஆசை முதலியவற்றிலிருந்து நீங்குவது என்றால் முழுமையாக நீங்கி விடுவது .அதன் பிறகு உலக இன்பியல் பற்றிச் சிறிதளவும் எண்ணம் இன்றி இருத்தல் என்பவையும் அடங்கும் இதனை,

**தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி**
**வலைப்பட்டார் மற்றை யவர் (குறள் - 347)**

முற்றும் துறந்தவரே உயர்ந்த நிலையினர் ஆவார். அவ்வாறு துறக்காத மற்றவர் அறியாமையாகிய வளையில் அகப்பட்டவர் ஆவார் என்பது துறவறத்தின் இயல்பையும், மதிப்பையும் காட்டுகிறது. அவ்வாறு முற்றும் துறக்காதவருக்கு துன்பங்கள் விடாமல் பற்றிக் கொள்ளும் என்பதை,

**பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்**
**பற்றி விடாஅ தவர்க்கு (குறள் - 437)**

என்பதன் மூலம் உணரலாம். கடைசிக் காலகட்டத்தில் பார்த்துக் கொள்ளலாம் என துறவறத்தார் எண்ணாமல் எல்லாப் பொருள்களும் உள்ள காலத்திலேயே துறவறம் மேற்கொள்ள வேண்டுமென்பதை,

**வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின்**
**ஈண்டு இயர் பால பல (குறள் - 342)**

துன்பமில்லாத வாழ்வு வேண்டுமேயானால் எல்லாக் காலத்திலும் எல்லா பொருளையும் துறக்கத் தயாராக வேண்டும். அதுவே இன்பத்தை ஈடு இணையில்லாமல் வழங்கும். இங்கே கூறப்படும் இன்பம் உலகியல் இன்பம் அல்ல அது துறக்கத்தார் இன்பம். அது தன்னை வருத்திக் கொள்ளும் போது கிடைக்கும் பேரின்பம் என்றே கொள்ள வேண்டும்.

**துறவிகள்**

துறவறத்தை மேற்கொள்பவர்களைத் துறவிகள் என்று அழைப்பது இவர்கள் உலகில் உள்ள பெரும்பாலான மதங்களிலும் இருப்பவர்கள். ஆனால் ஒவ்வொரு மதத்தினரின் நம்பிக்கைகளுக்கும் வழிபாட்டு முறை மாற்றங்களுக்கும் ஏற்பத்தமது செயல்பாடுகளை வகுத்துக் கொண்டவர்கள் ஆவர்.

**துறவறம் மனித வாழ்வில் நான்காம் ஆசிரம நிலையாகும். பந்த பாசங்களிலிருந்து விடுபட்டுத் தன்னை வருத்தி துறவு மேற்கொள்ளுதல் இக்காலத்தில் இடம் விட்டு இடம் சென்று, உடல் சுகத்தை துறந்து கடவுளை தியானிப்பதும், தான் அறிந்த உண்மைகளையும் நீதிகளையும் மக்களுக்கு கூறுதலும் ஆகும். சமய வாழ்வில் மக்களை ஈடுபடச் செய்தல் முற்றும் துறந்த நிலையே சந்நியாசமாகும். (சந்நியாசம்)**

துறவி, சந்நியாசி என்பவை ஒரு பொருள் குறித்தவையே ஆகும்.

**துறவிகளின் கடமைகள்**

மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடமைகள் உள்ளன .அவற்றை தனிமனித கடமைகள், சமூக கடமைகள் என்ற இரு பெரும் பகுப்புகளாகப் பிரிப்பர். அவ்வகையில் துறவறம் மேற்கொண்டுள்ள துறவிகளது கடமைகளும் எவையெவை என்று வரையறை செய்யப்பட்டுள்ளன.

**பக்கம் படாமை ஒருவருக்குப் பாடு ஆற்றல்**
**தக்கம் படாமை, தவம், அல்லாத் தக்கார்**
**இழிசினர்க்கேயானும் பசித்தார்க்கு ஊண் ஈத்தல்**
**கழிசினம் காத்தல் கடன் (சிறுபஞ்சமூலம், பா. 75)**

துறவிகள் எந்தப் பக்கமும் சாயாமல் எல்லா உயிர்களையும் ஒன்றாக பார்த்தல், உயிர்களுக்கு வரும் துன்பங்களை நீக்கும் ஆற்றல் பெறுதல் உலகில் உள்ள எந்த பொருளின் மீதும் பற்று வைக்காமையும் ஆனா முப்பெரும் கடமைகள் துறவியருக்கு உண்டு .இக்கடமைகளை இனிது நிறைவேற்றுபவர் துறவிகளுக்கான உயர்ந்த மதிப்பினைப் பெறுவர் என்பது உறுதியாகும்.

**துறவியரின் புறத்தோற்றம்**

மனிதனுக்கு மதிப்பினைப் பெற்றுத் தருவதாக அவனது தோற்றம் அமைகின்றது. அத் தோற்றத்தை அகத்தோற்றம், புற த்தோற்றம் என்று வகைப்படுத்துவர். புறத்தோற்றம் இயற்கையாக அமைவது. அகத்தோற்றம் பண்பினாலும், குணத்தாலும், நடத்தையாலும் உருவாவது. புறத்தோற்றத்தை விட அகத்தோற்றத்திற்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் .புறத் தோற்றத்தில் செய்யப்படும் அலங்காரம் மற்றும் உடுத்தும் ஆடைகள் அல்லது ஆடை உடுத்தாத தன்மை போன்றவை துறவிகளை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டக் கூடியதாக அமைகின்றது. **சடை முடியுடன் இருப்பதும் மொட்டை அடித்துக் கொள்வதும் ஆகும். மரவூரி தரித்த துறவியர் சடை, மீசை, தாடி, நகம் இவற்றை வளர்த்தல் வேண்டும். (மனுநீதி, பா. 6)** என மனுதர்மம் கூறும் கருத்திலிருந்து மாறுபட்டதாக அற இலக்கிய கால சிந்தனைகள் இருந்துள்ளன. மொட்டை அடித்தல் என்ற தன்மையை சமணர்கள் செய்தார்கள் என்பதை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

துறவு என்பது உலக வாழ்வில் உள்ள அனைத்தின் மீதான பற்றினைத் துறப்பது என்ற

மலர் - 3, இதழ் - 2, வைகாசி 2055 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

அடிப்படையை அறிந்து கொள்ள முடிகிறது. துறவறம் என்பதற்கான விளக்கங்கள் கூறப்பட்டுள்ள மதிப்புகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. உலகில் உள்ள எந்த பொருளின் மீதும் பற்று வைக்காமையுமான முப்பெரும் கடமைகள் துறவியருக்கு உண்டு. இக்கடமைகளை இனிது நிறைவேற்றுபவர் துறவிகளுக்கான உயர்ந்த மதிப்பினை பெறுவர் என்பது உறுதியாகும் மனித உடலின் இயல்பை உணர்ந்தவரே உண்மையில் சிறப்பான இல்லற வாழ்வை, கடமைகளைச் செய்து பிறகு உயர்வான துறவறத்தை மேற்கொள்ள முடியும் என்ற கருத்துக்களை அறிய முடிகின்றது.

**துணை நூற்பட்டியல்**

[1] க.ப.அறவாணன். *அற இலக்கியக் களஞ்சியம்.* சாரதா பதிப்பகம், சென்னை - 14, 2010.

[2] மு.அருணாச்சலம். *தமிழ் இலக்கிய வரலாறு.* வேமன் பதிப்பகம், சென்னை, 2012.

[3] சிங்காரவேலு முதலியார். *அபிதான சிந்தாமணி.* ஜகன்னா நகர், வில்லிவாக்கம், சென்னை - 600049.

[4] *மதுரை தமிழ்ப் பேரகராதி.* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

[5] தேவநேய பாவாணர். *தமிழர் வரலாறு.* தேன்தமிழ்ப் பதிப்பகம், சேலம், 1981.

[6] மு வரதராசனார். *அறமும் அரசியலும்.* நியுசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2004.

[7] திருலோக சீதாராம். *மனுநீதி.* தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1962.

[8] *சந்நியாசம்..* https://ta.wikipedia.org/wiki/ 25 மார்ச் 2024 அன்று அணுகப்பட்டது.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 3, Issue - 2, May 2024 E-ISSN: 2583-0481

# Expression of Love of the Lover and Beloved lived in the Sangam Period

**Dr. S. Prabakaran,** Assistant Professor of Tamil, Ayya Nadar Janaki Ammal College, Sivakasi.
ORCiD: https://orcid.org/0009-0005-1607-8931
**DOI: 10.5281/zenodo.11552845**
**Received:** 15 March 2024; **Revised:** 12 April 2024; **Accepted:** 22 April 2024; **Available Online:** 30 May 2024

## Abstract

*Tamil Nadu is said to be one of the ancient lands of mankind that has been a model society built on love and other virtues that drive the way of a benevolent life. Indeed, love has existed since the beginning of the life of human beings on this earth, Sangam life portrays the importance of love through the verses mainly focussed on love and life among the Thalaivan (lover) and Thalaivi (beloved). Love is an expression of human instinct and Tamil heritage and society has been built upon the deliverance of love among the lovers. Many lives are pivotal examples of love from the Sangam Period till today. Love is an expression of true understanding and mutual agreement for the commitment of life among the Thalaivan (lover) and Thalaivi (beloved). Many evidences of love and life are found in Sangam Literature. Sangam Literature mostly talks about (love) inner life. At Sangam times, every couple wants a loving life and those themes are dealt with by the poets of those times in the verses of Sangam literature. A life based on love can be an assurance of peaceful life and harmony. It has been seen in abundance in the Sangam songs. Sembulappeyalneerar highlights the love of Thalaivan for the Thalaivan through the song in a clear manner. Hence, this article explores the love of the leader who lived in the Sangam period through select Sanga literature.*

**Keywords:** Sangam Times, Thalaivan, Thalaivi, Love, Expression.

## References

[1] Sa.Ve.Suppiramaniyan, (U A). *Kurunthoka*i. Sanga Ilakkiyam, Volume – 1, Manivasakar Pathippakam, Chennai, 2010.
[2] Sa.Ve.Suppiramaniyan, (U A). *Natrinai*. Sanga Ilakkiyam, Volume – 1, Manivasakar Pathippakam, Chennai, 2010.
[3] Ka.Pa.Aravanan. *Ainthinai Imbathu*. Sabhanayagam Printers, Chennai - 10.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் - 3, இதழ் - 2, வைகாசி 2055 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சங்க காலத்தில் வாழ்ந்த தலைவன் தலைவியின் அன்பின் வெளிப்பாடு

**முனைவர் ச. பிரபாகரன்,** தமிழ் உதவிப் பேரராசிரியர், அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.
ORCiD: https://orcid.org/0009-0005-1607-8931
DOI: 10.5281/zenodo.11552845

## ஆய்வுச் சுருக்கம்

*மனித குலத்தின் ஆதி நிலங்களுள் ஒன்றாகச் சொல்லப்படும் தமிழ் நிலமானது, உயிர்களின் அடிப்படை உணர்வான அன்பின் மீது கட்டமைக்கப்பட்ட சமூகமாகவே தோன்றி நிலைப்பெற்றுள்ளது. இம்மண்ணுலகில் உயிர்கள் தோன்றிய காலத்தில் இருந்து அன்புஇருந்துள்ளது என்பதற்குச் சான்றாக, இவ்வுலகில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் பொருந்தும்.ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை அனைத்து உயிர்களும் அன்பு காட்டாமல் இருப்பதில்லை. அன்பு மனிதனின் உள்ளுணர்வை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வாக காணப்படுகின்றது. அன்புக்காக சங்க காலத்திலிருந்து இன்றைய காலம் வரை பல உயிர்கள் இறந்து கொண்டு தான் இருக்கின்றன. அப்படி இருந்தாலும் இந்த அன்பையாரும் வெறுப்பதில்லை. அன்பின் வெளிப்பாடாக காதல் அமைகின்றது.அன்பின் வழியது மட்டுமே உயர்நிலை என்று வாழ்ந்ததற்கான சான்றுகள், தமிழ் மொழியின் தொல் இலக்கியமான சங்க இலக்கியங்களில் பரவிக் கிடக்கின்றன. சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள சில பாடல்களின் வழியாகஅன்பின் வெளிப்பாட்டை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.*

**குறிப்புச் சொற்கள்:** சங்க காலம், தலைவன், தலைவி, அன்பு, வெளிப்பாடு.

## முன்னுரை

சங்க இலக்கியஙங்கள் பெரும்பாலும் (அன்பு) அக வாழ்க்கையை எடுத்துரைக்கின்றன. மனித வாழ்வில் அன்பு சார்ந்த வாழ்க்கையை அனைவரும் விரும்புகின்றனர். அன்பு சார்ந்த வாழ்க்கையைச் சங்கப்பாடல்களில் மிகுதியாக காணலாம். செம்புலப்பெயல்நீரார் தன் பாடலில் தலைவனின் அன்பை “செம்புலப் பெயல் நீர் போல அன்புடைய நெஞ்சம் தாம் கலந்தனவே” (குறுந். கதை 5. பாடல் 40) என்ற பாடல் அடிகள் வழியாக தலைவன் தலைவி மீது வைத்துள்ள அன்பினை எடுத்துரைக்கின்றார். சங்ககாலத்தில் வாழ்ந்த தலைவன் தலைவியின் மீது கொண்டுள்ள அன்பினை இக்கட்டுரை வழியாக அறியலாம்.

## தலைவியின் உணர்வை வெளிப்படுத்தும்நிலை

கார்காலம் வந்துவிட்டது. கார்காலத்தில் திரும்பிவருவேன் என்று சொல்லிச் சென்ற தலைவன் இன்னும் வரவில்லை. தலைவனின் பிரிவினால் தான் வருந்துகின்றேன். தான் பசலையுற்றதையும் கார்காலம் வந்ததையும் யாராவது தலைவனிடம் சென்று கூறினால் நன்றாக இருக்குமே என்று தோழியிடம் தலைவி கூறுகின்றாள். இதனை,

**இன்ன ளாயினள் நன்னுதல் என்றவர்த்**

**துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே**

**நன்றுமன் வாழி தோழிநம் படப்பை**

**நீர்வார் பைம்புதற் கலித்த**

**மாரிப் பீரத் தலர்சில கொண்ட (குறுந். பா.எண். 98)**

என்ற பாடல் வழியாக தலைவன் மீது தலைவி வைத்த அன்பை அறியமுடிகிறது.

தலைவனின் இதயம் பொருளுக்காக ஆசைப்படுகிறது. அது போன்று முன்னர் நடந்த நிகழ்வை எண்ணிப் பார்க்கின்றான்.

**குன்றுஊர் மதியம் நோக்கி நின்று நினைத்து**

**உள்ளினென் அல்லெனொ யானே முள்ளேயிற்று**

**திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்**

**எமதும் உண்டு ஓர்மதிநாட் திங்கள் (நற். பா. எண். 62)**

முன்னொரு நாள் பொருள்தேடிப் பிரியும்போது காட்டின் இடையில் ஊர்ந்து செல்லும் நிலவைப்பார்த்து முள்போன்ற பற்களையும் திலகம் பொருந்திய மனம் கமழும் அழகிய நெற்றியையுமுடைய நிறைமதியான திங்கள் ஒன்று எமக்கு உரிமையானதும் உள்ளது. அது உயர்ந்த மலையின் அப்பால் உள்ள ஊரில் உள்ளது என அன்பு நிறைந்த மனதுடன் நினைத்துப் பார்க்கின்றான். பொருளீட்டச் சென்றாலும் இயற்கையானது தலைவியை ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கின்றது.

**தலைவியின் அன்பு**

தலைவனை நெடுங்காலம் பிரிந்திருந்த தலைவி தலைவன் திரும்பி வரும் நாளை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏங்கி மெலிந்து போகிறாள். ஒரு கட்டத்தில் தன் வாழ்வைப் பற்றிய நம்பிக்கையையும் இழந்து விடுகிறாள். தலைவனைக் காணாமலேயே தன் உயிர் பிரிந்து விடுமோ என்று பயப்படுகின்றாள். இந்நிலையில் தலைவி தலைவனைப் பிரிந்த நிலையைத் தோழியிடம் நெஞ்சம் வருந்த எடுத்துரைக்கிறாள். அவள் தன் தோழியிடம், நான் இறப்பதற்கு பயப்படவில்லை. ஆனால் நான் இறந்து விட்டால் பிறகு வேறு பிறப்பு எனக்குக் கிடைத்து அந்தப் பிறப்பில் என் தலைவனை நான் மறந்துவிடுவேனோ! என்று நான் அஞ்சுகிறேன் என்று தோழியிடம் கூறுகின்றாள். இக்கருத்து தலைவியின் அற்புதமான ஒரு அன்பின் உணர்வை நற்றிணைப் பாடல் வழி நாம் உணரலாம்.

**சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவேன்**

**பிறப்புப் பிறிது ஆகுவதாயின்**

**மறக்குவேன் கொல் என் காதலன் எனவே (ந. பா. எண். 397)**

என்ற பாடல் வழியாக தலைவனைப் பிரிந்த தலைவி தன் அன்பின் வெளிப்பாட்டை எடுத்துரைக்கின்றாள்.

மூங்கில் வேலியாக கொண்ட மலை நிலத்தில் வேரிலுள்ள கொம்புகளில் பலாப்பழங்கள் தொங்குகின்ற மலைநாட்டுத் தலைவனே! விரைவில் தலைவியை மணம் செய்துகொள்ளும் காலத்தை உண்டாக்கிக் கொள்வாயாக! உன்னைத் தவிர யாரால் தலைவியின் நிலையை அறிந்துகொள்ள முடியும்? மலையின் சாரலில் சிறிய கொம்பிலே பெரிய பலா தொங்கிக் கொண்டிருப்பதுபோல, தலைவியின் உயிரோ மிகச்சிறியது அவள் உன்மேல் கொண்ட அன்பு பெரியது. ஒரு பெண்ணின் காதல் உணர்வை ஒரு ஆண் கவிஞன் மிக எதார்த்தமாக பதிவு செய்துள்ளார். இதனை,

**வேரல்வேலி வேர்கோட் பலவின்**
**சாரல்நாட! செவ்வியை ஆகுமதி!**
**யார் அஃது அறிந்திசினோரே! சாரல்**
**சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள்**
**உயிர்தவச் சிறிது, காமமோ பெரிதே! (குறுந். பா. எண். 18)**

இப்பாடல் வழி தலைவியின் காதலைத் தோழி தலைவனிடம் எடுத்துக்கூறுகின்றாள்.

**மறு பிறவியிலும் நீயே என் கணவன்**

இவ்வுலகில் மனித பிறவிக்கு மட்டும் ஏழு பிறவி இருப்பதாக நம்புகின்றனர். இப்பிறவியில் தலைவன் தலைவியின் மீது காட்டும்உண்மையானஅன்பு மறுபிறவியிலும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மறுபிறவி உண்டு என்று தலைவி நம்புகின்றாள். ஆதலால்தான் திருமண வாழ்க்கையில் ஒரு பெண் தன் கணவனை இப்பிறவியில் நீ எனக்கு கணவனாக கிடைத்தது பெரும் பாக்கியம், இந்த பாக்கியம் எல்லா பிறவிகளிலும் கிடைக்க வேண்டும். இதனை,

**இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயா கியரென் கணவனை**
**யானாகியர்நின் நெஞ்சுநேர்பவளே (குறுந். பா. எண்.49)**

மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தில் வாழும் பெண்ணின் காதலைக் கபிலர் எதார்த்தமாக எடுத்துக்காட்டியுள்ளார்.

**தலைவன் தலைவியின் வாழ்க்கை**

பாலை நிலத்தில் காதல் மிகுந்த ஆண் மானும், பெண் மானும் ஓடிக்களைத்து தாகம் தீர்க்க நீர் வேண்டி, அங்குமிங்கும் அலைகின்றன.ஒரு சுனையில் ஒரு மான் மட்டும் அருந்துவதற்கான நீர் உள்ளது. இந்நிலையில் பெண்மான் நீர் அருந்தட்டும் என்ற எண்ணத்தில் ஆண் மான் நீர் குடிப்பதுபோல் பாவனை செய்தது, அதே போல் பெண்மானும் நீர் குடிப்பதுபோல் பாவனை செய்தது. தன் துணை குடிக்கட்டும் என்று ஆண்மானும் தன் துணை குடிக்கட்டும் என்று பெண்மானும் பாவனை செய்தன. சுனையின் நீர் குறையவே

இல்லை.தங்கள் காதலினை அந்த இரண்டு மான்களும் வெளிப்படுத்திய விதத்தை நமக்கு உணர்த்துகிறது ஐந்திணை ஐம்பது. இதனை,

**சுனைவாய்ச்சிறுநீரை, எய்தாது என்று, எண்ணி,**
**பிணைமான் இனிது உண்ணவேண்டி - கலைமாதன்**
**கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பர், காதலர்**
**உள்ளம் படர்ந்த நெறி (ஐந்திணை ஐம்பது. பா. எண். 38)**

என்ற பாடல் வழியாக மாறன் பொறையனார் எடுத்துரைக்கின்றார். உண்மையான காதல் வாழ்க்கையில் தலைவனும், தலைவியும் எவ்வாறு விட்டுக்கொடுத்து வாழவேண்டும் என்பதை மனிதனுக்கு விலங்குகள் வழியாக எடுத்துரைக்கிறார்.

**தலைவனின்இரக்கம்**

தலைவன் முன்னொரு காலத்தில் பொருள்தேடச் சென்றான். பின்னும் பொருள்தேட எண்ணினான். பொருள் மனிதனின் வாழ்விற்கு அச்சாணி. பொருளில்லையெனில் இவ்வுலக வாழ்வில்லை என்றால் மிகையாகாது. ஆனால், தலைவன் அதைத் தலைவிக்காக இப்பொழுது வேண்டாம் எனத் தள்ளி வைக்கிறான்.

**யானே உள்ளிய வினை முடித்தன்ன இனியோள்**
**மனைமாண் சுடரொடு படர்பொழுது எனவே? (நற். பா. எண். 3)**

தலைவி என்பவள் நினைத்த செயலை முடித்த நிலைக்கு ஒப்பானவள். மாலைப்பொழுதில் நான் அவளுடன் இருக்க வேண்டும். எனவே, தான் பொருள் தேடச் செல்லவில்லை எனத் தன் நெஞ்சிடம் கூறுகிறான். தலைவன் இல்லையே என்ற எண்ணம் வந்தாலே தலைவி துன்பம் அடைவாள் அந்த துன்பத்தை தலைவிக்கு நான் தரக்கூடாது என்று நினைக்கின்றான்.

**தோழி தலைவியை ஆற்றுப்படுத்துதல்**

தலைவன் பயணம் செய்து கொண்டு இருக்கின்றான். இந்தப் பயணத்தில் என்னை மறந்துவிட்டால் நான் என்ன செய்வேன் என்கிறாள் தலைவி. அதற்குத் தோழி வருந்தாதே அவர் உன்னை ஒருநாளும் மறக்கமாட்டார். அப்படியேமறந்தாலும் அவர் சென்ற வழி இருக்கின்றதே அது அவருக்கு உனது நினைவுகளை உண்டுபண்ணும் என்கிறாள். எவ்வாறு உண்டு பண்ணும் என்று கேட்கிறாள் தலைவி. தலைவன் சென்ற அந்த காட்டுப் பாதையில் யானைகள் ஆணும் பெண்ணுமாக ஏராளமாகத் திரியும் வெயில் தாங்கமுடியாமல் தாகத்தில் பெண்யானை திரியும் பெண்யானையின் தாகம் தீர்க்க, ஆண்யானை மரப்பட்டைகளைப் உரித்து தன் இணையான பெண்யானைக்கு அன்புடனும், காதலுடனும் ஊட்டிவிடும். அதைக் கண்டதும் தலைவனுக்கு உன் நினைவு வந்து விடும். அந்தக் காட்சிகள் தலைவனை விரைவில் வரவழைக்கும் கவலைப்படாதே. இதனை,

**நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்**
**பிடிபசி களைஇய பெருங்கை வேழம்**

**மென்சினை யாஅம் பொளிக்கும்**

**அன்பின தோழியவர் சென்ற வாறே (குறுந். பா. எண்.37)**

விலங்குகளின் காதலை மனிதனின் காதலோடு இணைத்து பாடியுள்ளார் பெருங்கடுங்கோ.

**தலைவன் தலைவி இல்லறம் நடத்தும் விதம்**

தயிரைத் தாளிப்பதால் புகை எழுந்து அவள் கண்ணிற்பட்டு உறுத்திய போதிலும், தாளிப்பைத் தவறவிட்டால் தயிர்க்குழம்பின் சுவைப்பயன் குறையும் என்று கண்டு, புகைக்கு இடையேயும் உற்று நோக்கித் துழாவிச் சமைத்து முடித்தாள். கணவன் வீடு திரும்பியவுடன் அவனுக்குப் பரிமாறினாள். அவனோ நன்றாயிருக்கிறது என்று பாராட்டி சாப்பிட்டான். தன் சமையலுக்குக் கிடைத்த பாராட்டை எண்ணி மனைவி உள்ளத்தில் மகிழ்ச்சி மலர்ந்தது. அகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியால் புறத்தில் புன்முறுவலுடன் தலைவி காணப்பட்டாள். தலைவன், தலைவி இல்லறம்; நடத்தும் நிகழ்வினை,

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**

**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்…**

**இனிதெனக் கணவன் உண்டலின்**

**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந். பா. எண். 167)**

என்ற பாடல் வழி அறிய முடிகின்றது.

**தலைவனின் பிரிவை தாங்காத தலைவி**

தலைவியின் காதல் அவளுடைய பெற்றோர்களுக்குத் தெரிந்த பின்பு தலைவனைச் சந்திக்கவிடாமல் காவல் போட்டனர். அந்த நிலையில் தலைவனைப் பார்க்காத தலைவி தன் கவலைகளைத் தன் தோழியிடம் கூறினாள். அன்றில் பறவை ஒன்றையொன்று பிரியாமல் வாழும். அவை குளத்தில் இணைந்து செல்லும் வழியில் பூ ஒன்று தடையாக எதிர்ப்பட்டாலும் அந்த ஒரு நொடிப் பிரிவை ஓர் ஆண்டு கால அளவாக நினைத்து வருந்துமாம். அந்த அன்றில் பறவைகள் போல நாங்களும் ஒருயிர் ஈருடல்களாக வாழ்கிறோம்.தலைவன் என்னைப் பிரிந்தால் ஓருயிர் ஓருடலாக வாழும் நிலை வந்துவிடும். தலைவன் பிரிந்தவுடன் என் உயிர் போய்விடுவது மேலானது என்கிறாள் தலைவி. இதனை,

**பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன**

**நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்…**

**…திருவேம் ஆகிய வுலகத்**

**தொருவே மாகிய புன்மை நாம் உயற்கே (குறுந். பா. எண். 57)**

இப்பாடல் வழியாக அன்றில் பறவையின் அன்பையும், தலைவன் மீது தலைவி கொண்ட அன்பையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**முடிவுரை**

பொருளுக்கு இலக்கணம் வகுத்த தமிழ்ச் சான்றோர்கள் அக வாழ்க்கையில் மனித

வாழ்க்கையில் அன்பு என்ற ஒற்றை மந்திரம் வாயிலாக முழுமை பெற்றார்கள். தலைவன்-தலைவி இருவரும் வாழ்ந்து காட்டும் வாழ்க்கையில் தான் வாழ்வின் முழுமை அமைந்துள்ளது என்பதை சங்க இலக்கியப் பாடல்கள் உணர்த்துகின்றன. தலைவி தன் அன்பை வெளிப்படுத்தும் விதமும், தலைவன் தலைவியின் அன்பைப் புரிந்து கொள்ளும் விதமும், தோழி தலைவியை ஆற்றுப்படுத்தும் விதமும் போன்ற நிகழ்வுகள் எல்லாம் அன்பை மையமாக வைத்தே படைக்கப்பட்டுள்ளன என்பதை சங்க இலக்கிய பாடல்கள் வழி அறியமுடிகின்றது.

**துணை நின்ற நூல்கள்**

[1] ச.வே.சுப்பிரமணியன், (உ.அ). *குறுந்தொகை*, சங்க இலக்கியம் - எட்டுத்தொகை, தொகுதி -1), மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.
[2] ச.வே.சுப்பிரமணியன், (உ.அ). *நற்றிணை*. சங்க இலக்கியம் - எட்டுத்தொகை, தொகுதி -1), மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.
[3] க.ப.அறவாணன். *ஐந்திணை ஐம்பது*. சபாநாயகம் பிரிண்டர்ஸ், சென்னை - 10.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 3, Issue - 2, May 2024** **E-ISSN: 2583-0481**

# Life and Crises of the Lower Stratum People in the Novel *Thurvai*

**Mrs. K. Murugalakshmi,** PhD Researcher, Tamil Department, Avinasilingam College of Agriculture and Women's Higher Education Institute, Coimbatore - 43, Tamil Nadu, India.
**ORCiD**: **https://orcid.org/0000-0003-0206-2320**
**Dr. S. Bharani**, Assistant Professor of Tamil, Avinasilingam, Home Economics and Women Institute of Higher Education, Coimbatore - 43, Tamil Nadu, India.
**ORCiD**: **https://orcid.org/0000-0002-7736-1205**
**DOI: 10.5281/zenodo.11553400**
**Received:** 15 March 2024; **Revised:** 12 April 2024; **Accepted:** 22 April 2024; **Available Online:** 30 May 2024

## Abstract

*The world exists because of the change of civilization and it cannot be considered as absolute truth. In the present day, modernism lends itself only to industrial and material development. Even if an individual stacks up a thousand studies, there will be at least one conservative thought chirping out of them. This article has been designed to reflect the frustrations of life experienced by the downtrodden Dalit people, their humiliations and the rages that arise quietly from time to time in the novel "Thurvai". Even man is different in mind and religion, everyone has to submit to the grip of death. In India, in many places, cries and protests are emerging in the lives of the downtrodden people. They are neglected only for their lower strata of life. The word 'Untouchability is a Sin' is buried only in the books. The fashion of writing such truths refuses to impress people. Many forms of literature have emerged as a result of human intellectual development. These glimpses reflect developmental changes over time. This is one form of reflection and novelty that happened in the journey of the writers. The role of the writer is to depict the social change taking place in society during that period. Cho. Dharman is one of the peculiar and responsible writers of the 20th-century Tamil literary arena. His novels usually have a theme of poverty, suppression of the working class people and riots. His plots are natural and have been seen as a seed of equality portrayed to the people of modern times. Hence, this study presents an overall scenario of the life and crises of the marginalized people, their miseries due to religion, and caste, and possible solutions to overcome them. The article also describes how the author Cho. Dharman has addressed the grievances of the Tamil race through his novel.*

**Keywords:** Dalit, *Thurvai*, Kangani, Shelter, Liberation.

## References

[1] So. Dharman. *Thurvai*. Kasuvadu Pathipagam, Nagercoil, 2007
[2] Ilampooranar. *Tholkappiam, Porulathikaram Moolamum Uraiyum*. SaivaSiddantha Noolpathippuk Kalagam, Chennai, 1986.
[3] Varatharajan, M. *Thirukkural Thelivurai*. Thenindiya Saiva Siddantha Padaipukkal, Gowra Pathipagam, Chennai, 2018.
[4] Venkatasamy Nattar, Na. Mu. *Silapathikara Moolamum Uraiyum*. Gowra Pathipagam, Chennai, 2018.
[5] Natarajan, Thi. Su. *Tiranaivukkalai*. NCBH, Chennai, 2003.
[6] Mangudimaruthanar. *Mathuraikanchi*. Kalaga Veliyeedu, Chennai-1, 1956.
[7] V. Muthukalannjiam. "Dalit Feminisn in the Novel *Cremation*." *Research Journal of Tamil*, Vol. 3, S-1, June 2021, pp. 83-89. doi:10.34256/irjt21s113
[8] Kalyana Sundaranar. Thiru, Ve. "Purananootril Puthiya Velicham." *Tamilsaral Katturaith Thirattu* (part 1), Arasi Book Depot, Mylapore, Chennai - 600004, 1969.

[9] Subramaniam, Sa. Ve. *Tamil Ilakkiya Varalaru*. Manikkavasakar Pathipagam. Chennai, 1999.
[10] "Oru Kurippu." Puthuvai Dravida Iyakkam. Puduvai.
[11] Puliyurkesigan. *Kurunthokai Moolamum Uraiyum*. Saran Book House, Chennai - 17.
[12] Ovvai. Su. Duraisamy Pillai. *Natrinai Moolamum Uraiyum*. NCBH, Chennai, 2003.
[13] Omvedt, Gail. "Jotirao Phule and the Ideology of Social Revolution in India". *Economic and Political Weekly*.11 September 1971.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் - 3, இதழ் - 2, வைகாசி 2055 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தூர்வை புதினம் காட்டும் அடித்தள மக்களின் வாழ்வியல் நெருக்கடிகள்

**திருமதி கி. முருகலட்சுமி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் - 43.
ORCiD: https://orcid.org/0000-0003-0206-2320
**முனைவர் சு. பரணி**, உதவிப்பேராசிரியர், நெறியாளர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் - 43.
ORCiD: https://orcid.org/0000-0002-7736-1205
**DOI: 10.5281/zenodo.11553400**

**ஆய்வுச் சுருக்கம்**

*உலகமானது நாகரிக மாற்றத்தினால் தான் உருண்டோடி கொண்டிருக்கிறது என்றால் அது முழுமையான உண்மை என்று கருத முடியாது. நவீனமயம் வெறும் தொழில் வளர்ச்சிக்கும் பொருள் வளர்ச்சிக்கும் மட்டுமே கை கொடுக்கிறது. ஆயிரம் ஆய்வுகளை அடுக்கிக் கொண்டே போனாலும் அத்தனையிலும் நிச்சயம் எங்கேனும் ஒரு பிற்போக்கு சிந்தனையாவது எட்டிப்பார்க்கும். தாழ்த்தப்பட்ட தலித் இன மக்கள் அனுபவிக்கும் மனக்குமுறல்களை படித்தோ, பார்த்தோ எளிதில் மடித்து வைத்து விட முடியாது. அவர்களின் அவமானங்களையும், அமைதியாக அவர்களுக்குள் அவ்வப்போது எழும் ஆவேசங்களையும் பிரதிபலிக்கும் விதமாக இக்கட்டுரை அமைந்திருக்கிறது. மனிதன் மனதாலும், மதத்தாலும் வேறுபட்டிருப்பினும் மரணத்தின் பிடியில் யாவரும் ஒன்று தான். அவர்களின் அத்துனை அழுகுரலிலும் ஆர்ப்பாட்டத்திலும் எங்கேனும் சில பிசுக்குகள் ஒட்டிக்கொண்டு தான் இருக்கிறன. தீண்டாமையின் வாசகங்கள் புத்தகங்களோடு மட்டுமே புதைந்து விடுகிறது. ஆனால் அது இன்னும் பல மனிதர்களின் மனதில் ஏனோ பதிய மறுக்கிறது. அவ்வகையில் ஓர் இனத்தவர்களின் மனக் குமுறல்களை சோ.தர்மன் தனது "தூர்வை" புதினத்தின் வாயிலாக எப்படி எடுத்துரைத்திருக்கிறார் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை விவரிக்கிறது.*

**திறவுச் சொற்கள்**: தலித், தூர்வை, கங்காணி, உறைவிடம், விடுதலை.

## முன்னுரை

மனித மன வளர்ச்சியின் விளைவாக உருப்பெற்ற இலக்கிய வடிவங்கள் மிகப்பல. இவை மொழியினடத்து காலந்தோறும் வளர்ச்சி மாற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. இப்பிரதிபலிப்பு வடிவங்களில் ஒன்று தான் 'புதினம்'. புதினம் என்பது அந்தக் காலகட்டத்தில் சமூகத்தில் நிகழும் சமூக மாற்றத்தைச் சித்தரிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். புதினம் பொதுவாக ஏதேனும் 'கரு' (Theme) ஒன்றைக் கொண்டதாக அமையும். அதன் கதைக்கரு இயற்கையாக அமைதல் வேண்டும். புதினத்திற்கு எதுவும் கருவாக அமையலாம். அது நிகழ்ச்சிகளோடும் கதை மாந்தர்களின் உணர்ச்சிகளோடும், கற்பனையோடும், வருணனைத்

திறத்தோடும் அமையும் போது அழகிய புதினமாக உருவம் பெறும் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது. விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் நெருக்கடிகளையும், சமயத்தால் சாதியால் அவர்கள் சந்திக்கும் துயரங்களையும், அவற்றை களைய தீர்வுகளையும் இவ்வாய்வு முன்வைக்கிறது.

**புதினத்தின் இருவகை அமைப்பு**

சூழ்நிலை அமைப்பை சமுதாயப் பின்னணி (Social Setting), காட்சி பின்னணி என இரு வகைப்படுத்தலாம். சில புதினங்களில் சமுதாயத்தின் ஒரு பகுதி மட்டுமே பின்னணியாக விளங்கும் மேல்மட்ட வாழ்க்கை, நடுத்தர மக்கள் வாழ்க்கை, அடித்தள மக்கள் வாழ்க்கை, தொழிலாளர் வாழ்க்கை என இவற்றில் ஏதேனும் ஒன்று புதினத்தின் பின்னணியாக அமையும். பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறைகள் முதலியவை சமுதாய பின்னணியில் அடங்கும்.

***தூர்வை* புதினத்தின் வடிவமைப்பு**

'தூர்வை' என்றால் தூர்ந்து போதல் என்று பொருள்படும். தூர்ந்து போய்க் கொண்டிருக்கும் கரிசல் காட்டின் வேளாண்மைத் தொழிலை மீட்டெடுக்கும் முயற்சியாக *தூர்வை* புதினம் அமைந்திருக்கிறது. இந்த புதினமானது இரண்டு தலைமுறைகளை பேசும் விதமாக விரிகிறது. மினுத்தான் மூலமாக முதல் தலைமுறையையும், மினுத்தானின் மகன் பெரியசோலை மூலமாக இரண்டாம் தலைமுறையையும் விவரிக்கிறது. சாதிய அடக்குமுறையின் நுகத்தடியில் வாழும் மக்களின் மனக்குமுறல்களை வெளிப்படுத்தும் விதமாக எழுத்தாளர் சோ. தர்மன் அவர்கள் இப்புதினத்தை படைத்துள்ளார்.

நில வளத்தின் மீதும், நீர் வளத்தின் மீதும் பன்னாட்டு நிறுவனங்களுடைய லாபநோக்குடைய சுரண்டல்களை இப்புதினம் வெளிப்படுத்துகிறது. இவ்வடிப்படையில் இரண்டு தலைமுறைகளுக்கு முன் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டியை சார்ந்த உருளைக்குடி கிராமத்தில் விவசாய நிலங்களுடன் வீடு, வாசல் என்று வசதியாக வாழ்ந்த தலித் சமூகத்தினரின் வாழ்க்கை அப்பகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள், சாக்கு கம்பெனிகள் வருகையினால் பெரும் மாற்றத்துக்குள்ளாவதைச் சித்தரிக்கும் வகையில் *தூர்வை* புதினமானது அமைந்திருக்கிறது. ஆரம்பக் காலத்தில் தலித் சமூகத்தில் வாழ்ந்த மக்கள் அடைந்த அவமானங்களையும், அடக்குமுறைகளையும் இந்த புதினத்தின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

**தலித்**

'தலித்' என்ற மராட்டியச் சொல் 'ஒதுக்கப்பட்ட மக்கள்' என்ற ஒரு பொதுவான சொல்லாக இருந்தது. இன்று தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்ற வரையறுத்த பொருளில் அகில இந்தியத் தன்மை பெற்ற சொல்லாகவும், ஒரு கருத்தியலாகவும் வழங்கேறியிருக்கிறது. இச்சொல் தாழ்த்தப்பட்ட சமூகங்களின் ஒரு கூட்டுவடிவ இலட்சினையாகவும், ஒரு பண்பாட்டு அரசியலின் அடையாளமாகவும் இருக்கின்றது. தமிழ்ச்சூழலில் தொண்ணூறுகளுக்குப் பிறகு

தலித்திய வெளிபாடுகள், நிகழ்வுகள், அதன் முக்கியச் செயல்பாடுகள் அதிகமாக உள்ளன. தலித் பெண்கள் வர்க்கம், சாதீயம் என்ற அடிப்படையில் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டும் தீண்டாமையின் பிடியில் இறுக்குண்டும் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கின்றனர். 'தகனம்' நாவலில் தலித் பெண்கள் கல்வியில்லாததால், மயானத்தில் பிணம் எரிக்கின்ற நிலை, தொழில் முறையால் அவர்கள் அடையும் துன்பம், சாதி இழிவால் ஒடுக்கப்படும் அவலங்கள், சிக்கல்கள் பற்றியும் ஆசிரியர் ஆண்டாள் பிரியதர்ஷினியும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஆண்டாள் பிரியதர்ஷினி, *தகனம்* நாவலில் விளிம்புநிலைப் பெண்கள் ஆளுமை) காலம்காலமாகத் தலித் மக்கள் சாதிய ரீதியாக ஒடுக்கப்படுகின்றனர். இதனால் பெண்களுக்குப் பல கொடுமைகளும் அவமானங்களும் நடக்கும் விதமாக அடிமைப்படுத்தப்படுகின்றனர். பிற்படுத்தப்பட்ட மக்கள் கல்வியறிவு இல்லாததன் காரணமாக அடக்கப்பட்டு ஒடுக்கப்படுவதால் தலித் பெண்ணியம் பற்றிப் பேச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. **"பெண்ணியம் என்பது ஒடுக்கப்பட்ட ஒரு பிரிவினரான பெண்களின் விடுதலைச் சித்தாந்தம்"** என்கிறார் கெய்ல் ஓம்வெய்த் பொதுவாக அடித்தட்டுப்பெண் என்பவள் அடிமைப்பட்டு இருப்பதால் காலந்தோறும் இப்பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பல வடிவங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆண்டாள் பிரியதர்ஷினியின் "தகனம்" நாவலும் தலித் பெண்களுக்குக் கல்வியறிவு இல்லாததால் உணவுக்காகவும் இருப்பிடத்திற்காகவும், உழைக்கும் போதும் உண்டாகும் பிரச்சினைகளை பொதுவாக வெளிப்படுத்துகின்றது.

**மழையின்மையின் கொடுமை**

இறைவன் மழைக்கும் மண்ணிற்குமான ஒரு பாலத்தை உருவாக்கியிருக்கிறான். அந்த பாலமானது மக்களின் பயன்பாட்டிற்காக பிணைக்கப்பட்டது. ஒரு விதையானது மழைக்கும் மண்ணிற்கும் பொதுவான ஒர் உறவாகும். இரண்டில் ஒன்று இல்லையென்றாலும் மனித குலமானது நிலைத்திருக்காது. அந்த வகையில் தூர்வைப் புதினத்தில் உள்ள மக்கள் மழையின்மையால் மனம் கலங்கிய அவல நிலையினை இங்கே காண முடிகிறது.

**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று. (வான்சிறப்பு. குறள். 11)**

மழைபெய்ய உலகம் வாழ்ந்து வருவதால் மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத்தக்கதாக மு.வரதராசனாரின் உரை விளக்குகிறது.

மக்கள் ஆற்றுநீர்வரத்து இல்லாமல் மழையை மட்டுமே நம்பி விவசாயம் செய்கிறார்கள். இவர்களுக்கு நீர் ஆதாரம் என்பது தக்ககாலத்தில் பெய்யும் மழை மட்டுமே. மழைபெய்து கண்மாய் நிறைந்து விட்டால் ஆண்டு முழுவதும் தண்ணீருக்குப் பஞ்சம் ஏற்படாது. தண்ணீர் பற்றாக்குறை இல்லாதபோது பல்வேறு விதமான விவசாயங்களை செய்கின்றனர். விவசாயத்தோடு நெருங்கிப் பின்னிப் பிணைந்துள்ள ஒன்றாக "கண்மாய்" மாறுகிறது. மக்களின் வாழ்வியல் கண்மாயோடு பிணைக்கப்படுகிறது. ஆக கண்மாய் வழியே ஒரு

இடைக்காலத் தமிழ் சமூகத்தின் அசைவியக்கத்தைப் புனைவின் வழியாகப் பதிவு செய்கிறார் சோ. தர்மன்.

> **அந்த வருஷம் மலை ஏமாற்றி விட்டது. வீட்டிலேயே சேர்த்து வைத்திருந்த விதை வித்துக்கள் எல்லாவற்றையும் காட்டில் கொண்டு போய் போட்டுவிட்டு மழைக்காக கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள் சம்சாரிகள் மேகம் தினந்தினம் விளையாட்டுக் காட்டியது. கரிசல் காய்ந்து பொசுங்கியது. இன்னைக்குப் பேய்ந்து விடும் நாளைக்கு பேய்ந்து விடும் என்ற நட்பாசை குறைந்து கொண்டே வந்தது யாராவது இரண்டு பேர் சேர்ந்து விட்டால் போதும் மழையை பற்றிய பேச்சு தான்.**
>
> **“என்ன மாமாய்! இந்த வருஷம் அர வயித்துக்**
> **கஞ்சியாவது ஊத்துமா இல்ல சட்டி எடுக்க**
> **வச்சிகுமா?” (தூர்வை.பக்.எ-5)**

என்பதிலிருந்து மக்களிடத்தில் மழை பற்றி இடைவிடாத எதிர்பார்ப்பானது மேலோங்கி இருந்த தன்மையினை அறிய முடிகிறது.

**மழைக்கஞ்சி**

பொதுவாக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்ட வாழ்மக்கள் வட்டாரத்தில் மழைக்கஞ்சி என்ற இறைவழிபாடானது இன்றளவும் வழக்கில் இருந்து வருகிறது. மழைக்கஞ்சி என்பது பல வருடங்களாக பொழியாத மழைக்காக வருணபகவானை வேண்டி ஒட்டுமொத்த மக்களால் செய்யப்படும் ஒரு சடங்கு, சம்பிரதாயம் என்பதை காட்டிலும் அவர்களின் முழு நம்பிக்கையுமாகும். சிறுசுகள் எல்லோரும் மழைக்கஞ்சி எடுத்தார்கள். இளவட்டங்களும், பெண்களும் கிழடுகளும் கூட இதில் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் எல்லோரும் பெரிய பெரிய வாளிகளிலும் சட்டிகளிலும் வீடுவீடாய்ப் போய் கஞ்சி வாங்கினார்கள்.மழையின்றித் துயருறும் பாமர உழைக்கும் மக்கள் மழை வேண்டி சடங்குகளை நிகழ்த்துகின்றனர். இதற்காக தெய்வத்திற்கு பலி கொடுப்பதுமுண்டு. மழையை வேண்டி குறிஞ்சி நிலத்திலுள்ள குறவர்கள் தெய்வத்தை வணங்கிய செய்தியினை,

> **மலைவான் கொள்கெனக்**
> **கடவு ளோங்கும் வரையேன்**
> **மார்வெட்டெழுந்து**
> **கிளையோடு, மகிழுங்குன்ற நாடன் (நற்றிணை. பா. 165)**

என்ற நற்றிணைப் பாடலில் மழைக்கஞ்சி பற்றி அறியமுடிகிறது.

> **மழையுழில்ல தண்ணியுமில்ல**
> **மழைக்கஞ்சியோ மழைக்கஞ்சி**
> **ஆடுமாடுக்கு தண்ணியில்ல**
> **அம்மங் கஞ்சியோ அம்மங்கஞ்சி (தூர்வை. பக். எ.8)**

என ஒருசிலர் பாட, சுடு மண்ணில் அவர்களை கீழே தள்ளிப் புரட்டினார்கள். அவ்விடத்தில் அவர்கள் கட்டாயம் அழ வேண்டும். அவர்களின் கண்களில் இருந்து ஒரு சொட்டு கண்ணீராவது பூமாதேவியின் மேல் விழுந்தால் தான் வருணபகவான் மனமிறங்குவான், அடிவாங்கிக் கொண்டு ஓடிய பெண்களை இடைவெளியில் ஒளிர்ந்திருந்த இளவட்டங்கள் வழிமறித்து மல்லுக்கட்டி அழவைத்தார்கள். தலையை விரித்துப் போட்டுக் கொண்டு பெண்கள் அழுது கொண்டே ஓடினார்கள். இதில் ஆச்சர்யம் என்னவென்றால் இப்படியெல்லாம் அவ்வூர் மக்கள் மழைக்கஞ்சியை எடுத்ததோடு ஆவாரஞ்செடியை விழுந்து கும்பிட்டு விட்டு ஒப்பாரி வைத்து அழுதார்கள். ஆனாலும் வர்ணபகவான் மனமிரங்கவில்லை மாறாக அவர்களை வெய்யில் பொசுக்கியது. மழையின்மையால் அங்கு மனிதகுலமானது மறித்துக் கொண்டிருப்பதனை இப்புதினம் வாயிலாக அறிய முடிகிறது. படகரின் மக்கள் எந்த நீர்நிலையைப் பார்த்தாலும் அந்த நீரைக் கையில் எடுத்து நெற்றியில் ஒற்றி தம்மீது தெளித்துக்கொள்கின்றனர். வாழ்வியலில் முக்கியச் சடங்கான திருமணச் சடங்கில் மணப்பெண் குடத்தில் நீர்க்கொண்டு வரும் சடங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகவும் அமைந்துள்ளதாக இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

**கிறிஸ்தவ தேவாலயங்களில் தாழ்த்தப்பட்டோர் நிலை**

இவ்வுலகில் மதம் என்பது இறைவனால் உருவாக்கப்பட்ட அடையாளம் அல்ல. அது மனிதனால் மனிதனுக்காக பிணைக்கப்பட்ட ஒரு சங்கிலி எனலாம். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளான். அவ்வகையில் இக்கிராமத்தில் கிறிஸ்தவ மத தேவாலயங்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையினை காணமுடிகிறது. திடீரென்று ஒரு நாள் அல்லோலப்பட்டது பினாங்களிலிருந்த கங்காணியின் பிணம் ஊருக்கு வருகிறது என்று சொல்லி அவருடைய உறவினர்கள் எல்லோரும் வந்து விட்டார்கள் கங்காணியில் பூர்வீக ஊர் இந்த ஊர். ஆகையால் அவன் பிணத்தை இங்கதான் அடக்கம் செய்ய வேண்டும் என அவனுடைய மகன், மகள், பேரன்கள் என எல்லோரும் முடிவு செய்தார்கள். அவர்கள் அணிந்திருந்த ஆடைகளை அங்குள்ள மக்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள் அவன் பிணத்தை அடக்கம் செய்து கல்லறை கட்டுவதற்காக அவர்கள் இடம் தேடி அலைந்தார்கள். ஊருக்குப் பக்கத்தில் தரிசாய் இருக்கும் மினுத்தான் நிலத்தை விலைக்குக் கேட்டார்கள் என்ன விலையானாலும் கங்காணியின் குடும்பத்தார் கொடுக்கத் தயாராக இருந்தார்கள். ஆனால் மினுத்தான் குடும்பத்தினர் பிடிவாதமாக மறுத்துவிட்டனர். **“நீங்கள் லச்ச லட்சமா பன ஒசரம் குமிச்சாலும் சரி, செத்த சவம் பொதைக்க எடங் கெடையாது, அதைவிட குடிக்க கஞ்சியில்லாமலயும், உடுத்த உடையில்லாமயும் போனாக் கூட பரவாயில்லை” (தூர்வை. ப. எ-13)** என்று பெரிய சோலை தன் நிலத்தை விற்பதற்கு ஒத்துப் போகாமல் அவன் உயர்வாக மதிக்கும் மனிதர்களுக்கு மரியாதை அளித்தான். மண்ணை மதிக்கும் பெரியசோலையின் உயரியசிந்தனை இவ்விடத்தில் வெளிப்படுவதை அறிய முடிகிறது. அதன் பிறகு கங்காணி

குடும்பத்தினர் கும்பிடுவதற்காகப் பெரிய வேத கோயில் ஒன்று கட்டப்பட்டது. அதன் உச்சியில் பெரிய வெண்கல மணி பொருத்தப்பட்டது. ஞாயிற்றுக்கிழமைகளில் அதன் சத்தம் சுற்றுவட்டாரம் முழுவதும் கேட்டது.

கண்ணாடியாய் மின்னும் வெங்காயசருகுச் சோலைகளை முக்காடு போட்டுக்கொண்டு அவர்கள் முட்டாங்கால் போட்டுக் கைதட்டிப் பாட்டு படித்ததை ஊர் ஜனங்கள் வேடிக்கையாய்ப் பார்த்தவர்கள் கொஞ்ச நாளில் வேதக் கோயில் கூடக் கும்பிட ஆரம்பித்துவிட்டார்கள். ஊரின் போக்கு மாறிக்கொண்டே போனது. அவ்வூர் மக்கள் ஒரு சிலர் வெளியேயும், ஒரு சிலர் உள்ளேயும் வழிபாடு செய்தார்கள். இவற்றின் மூலம் அடிமைத் தனத்திலிருந்து மீளலாம் என்று நம்பினார்கன் வாழ்க்கையில் தலை நிமிர்ந்து வாழலாம் என்று விரும்பினார்கள். அனைத்துச் சுதந்திரமும் பெற்று தலை நிமிர்ந்து சிறக்கலாம் என்றும் மதம் மாறினாலும் இங்கு வர்ணாசிரமக் கொள்கை பின்பற்றுவதை உணர முடிகிறது. இதே கருத்தை புதுவை திராவிட இயக்கம் “ஒரு குறிப்பு” என்ற தலைப்பில்,

> **புதுச்சேரி மாதா கோயில் ஒடுக்கப்பட்டோருக்கான தனிகுறுக்குச் சுவர் மாதா கோவிலுக்குள் இருந்தது. சமத்துவம் கிடைக்குமென்று கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்டவர்கள் அங்கும் தீண்டாமை தங்களை தீண்டியதையும், அது தேவாலயத்தின் நடுவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனி குறுக்குச்சுவர் என்ற வடிவில் எழுந்து நின்றதையும் பொறுக்க முடியாமல் குருமார்களிடமும், அரசாங்கத்தினரிடமும் முறையிட்டனர். என்றாலும் மதம் மாறிய உயர் சாதியினரின் குரலே மேலோங்கியது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு தேவாலயத்திலும் தனியிடம் என்பது எழுதப்படாத சட்டமாயிற்று (ஒரு குறிப்பு)**

என்று குறிப்பிட்டுள்ளனர். இச்செய்தியின் வாயிலாக தேவாலயங்களிலும் சாதிய பாகுபாடுகள் வேரூன்றிக் கிடப்பதனை தெரிவுபடுத்துகிறார். எத்தகைய இறைதலமாக இருந்தாலும் பக்தி நிறைந்திருக்கிறது என்பது மறுக்க முடியாத நிதர்சனமாகும். இருப்பினும் அங்கே சாதியம் பாராட்டப்படுவது வருத்தத்திற்குரியது.

**வறுமை நிலை**

சமுதாயத்தில் நிலவும் அக்கிரமங்களில் மிகவும் கொடியதாக நம் கண்களுக்கு தோன்றுவது வறுமை ஆகும். சுட்டுப் பொசுக்குவதில் அக்னி பகவானை விட கொடியதாக இந்த வறுமை காணப்படுகிறது.

> **குடுமி புதல்வன் பல்மான்**
> **பால்இல் வறுமுலை**
> **சுவைத்தனன் பெறாஅன்**
> **கூழும் சோறும் கடைஇ ஊழின்**
> **உள்இல்**

**வறுங்கலம் திரிந்து, அழக்கண்டு (புறநானூறு. பா. 160)**

என்ற பாடலில் குடுமியை உடைய தமது புதல்வன் உண்ண உணவில்லாது இருந்த தன் தாயின் மார்பினை சுவைத்துப் பார்க்கின்றான். பால் இல்லாததால் கூழ், சோறு இருக்குமா என பாத்திரத்தைத் திறந்து பார்க்க, உணவு ஏதுமில்லாமல் குழந்தை அழக் கண்டு அதன் மூலம் தந்தையான பெருஞ்சித்திரனார் குடும்பத்தின் வறுமை நிலையை எடுத்துக கூறுகிறார்.

**பெரியசோலை சக்கிலியக் குடியை ஏறிட்டுப் பார்த்தான் பத்து பதினைந்து வீடுகளிலும் எப்போதும் குஞ்சுகளும் குறுவான்களுமாக ஜேஜே என்றிருக்கும் தெருவில் இன்று ஒரு ஆள் கூட இல்லாமல் அருள் கெட்டுப் போய், வெறுச் சென்றிருந்தது. அவ்வளவு பேருமே பிழைப்புத் தேடி பட்டணக் கரைக்கு போய்விட்டார்கள். தெருவே பாழாய் போய்க்கிடந்தது. அவனுக்கு மகாதேவனைப் பார்த்து பரிதாபமாக இருந்தது. (தூர்வை. பக். எண் 15)**

சொந்த ஊரிலே வாழ்வதற்கு உண்பதற்கு உணவும் ஏற்ற வசதிகளும் இல்லாததால் மக்கள் நகரத்தை நோக்கி செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. விவசாயம் செய்வதற்கு வழியில்லாமல் அவ்வூர் மக்கள் ஒரு சிலர் வெளியேற தொடங்கினார். இதன் மூலம் தலித் மக்கள் வறுமை என்னும் பிடியில் சிக்கித் தவிக்கும் அவல நிலையைக் காண முடிகிறது.

**அடித்தட்டு மக்களின் வாழிடச்சூழல்**

இன்றைய காலகட்டங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் வாழ்கின்ற பகுதி "சேரி" என்று அழைக்கப்படுகிறது. இச்சொல் மதுரைக்காஞ்சியிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. **துணங்கை அம் தழுஉவின் மணம் கமழ் சேரி (மதுரைக்காஞ்சி. பா. 329)** என்னும் அடிகள் குறிப்பிட்டுள்ளது. மதுரைக்காஞ்சியில் சேரிவாழ் மக்கள் துணங்கைக் கூத்தினையும், அழகிய குரவைக் கூத்தினையும் உடைய சேரியானது மணம் கமழ்ந்து இருந்தது எனவும், பல திறமை மிக்க கைத்தொழில் வினைஞர்கள் வாழ்ந்த இடமாக சேரி இருந்தது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இக்காலச் சூழலில் 'சேரி' என்னும் சொல் மக்கள் படும் துன்ப நிலையை உணர்த்தும் வகையில் பொருள்படுகிறது. "சேர்ந்து வாழும் இடம் சேரி என்றும் "சேரி" என்பதற்கு கூடு, நெருக்கு, திரண்ட மக்கள் சேர்ந்து வாழ்ந்த இடம் சேரி என சங்ககாலத்தில் பொருள் கொள்ளப்பட்டுள்ளது".

**சேரி இளையர் செல அருநிலையர் (தூர்வை. பக். எ. 16)**

**மீன் சீவும் பாண்சேரி, ஆடுவார் சேரி (தூர்வை. பக். எ. 17)**

முதலிய அடிகள் இதற்கு சான்றாகும். சிலப்பதிகாரத்தில் பார்ப்பனச்சேரி இருந்தமையையும் நாம் அறிய முடிகிறது. ஊர் என்பது பல சேரிகளை உள்ளடக்கியிருந்தது. ஆனால், இன்றைய சூழலில் தாழ்த்தப்பட்டவர்கள் வசிப்பிடங்களை மட்டுமே குறித்து காட்ட சேரி என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. சேரியில் வாழும் மக்கள் குடிக்க கஞ்சி இல்லாமல் அவதிப்பட்டார்கள். ஒரு குடம் தண்ணீருக்கு நாய் சண்டை போடவும் குளிப்பதற்கும் வெளியே போவதற்கும்

அவமதிக்கப்பட்டனர். இவ்வகையில் தாழ்த்தப்பட்டவர்கள் வசிக்கும் பறைசேரி பகுதியும், குடிப்பகுதியும் இருந்த அசுத்தமான சூழ்நிலையினை இப்புதினம் சுட்டுகிறது.

**முடிவுரை**

ஒரு நிலவுடமைச் சமூகம் தொழில்மய சமூகமாக மாற்றத்திற்கு உள்ளாக்கப்படும் போது அச்சமூகம் எப்படிப்பட்ட போராட்டங்களையும், பிரச்சனைகளையும் சந்திக்கிறது என்பதற்கான உள்ளடக்கமே *துர்வை* புதினம் எனலாம். *தூர்வை* நாவலில் காணலாகும் தலித் மக்களின் அவல நிலைகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. தலித் என்ற சொல்லுக்கான விளக்கங்களும், தலித்துக்கள் என்பதற்கான அறிஞர்களின் விளக்கங்களும் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. தமிழ் படைப்புலகில் தோன்றியுள்ள தலித் படைப்பாளர்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. வரலாற்றில் தொன்மைக்காலம் முதல் இறுதிகாலம் வரை தோன்றியுள்ள தலித் படைப்பாளர்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. தலித் மக்கள் மழை பெய்த காலத்தில் அடைத்த அளவுக்கதிகமான பணிச்சுமையும், மழையின்மையின் போது ஏற்படும் வறுமை நிலையையும் இங்கு விளக்கப்பட்டுள்ளது. சேரியில் வசிக்கும் மக்களின் வசிப்பிடங்களும், தண்ணீர் பற்றாக்குறை காரணமாக மழைக்கஞ்சி எடுப்பது போன்ற தண்ணீர்ப் பஞ்சத்தின் செயல்பாடுகளையும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் எதிர்ப்புக்குரல்களின் சிக்கல்களுக்கு தீர்வுகாணும் முறையில் இக்கட்டுரை அமைந்துள்ளது. விளிம்புநிலை மக்களின் வாழிடச்சூழல் சாதிய நெருக்கடிகளையும் இவ்வாய்வு பதிவுசெய்கிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] தர்மன், சோ. *தூர்வை*. காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2007.

[2] இளம்பூரணனார். *தொல்காப்பியம், பொருளதிகாரம் மூலமும் உரையும்*, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற்பதிப்பு -1986.

[3] வரதராசன், மு. *திருக்குறள் தெளிவுரை*. தென்னிந்திய சைவ சித்தாந்த படைப்புகள், கௌரா பதிப்பகம், சென்னை – 2018.

[4] வேங்கடசாமி நாட்டார், நா. மு. *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்*. கௌரா ஏஜென்சி, சென்னை – 2018.

[5] நடராசன் தி.சு. *திறனாய்வுக்கலை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிமிடெட், சென்னை, 2003.

[6] மாங்குடிமருதனார். *மதுரைக்காஞ்சி*. கழக வெளியீடு, சென்னை - 1, 1956.

[7] வி, முத்துக்களஞ்சியம். "தகனம் நாவலில் தலித் பெண்ணியம்." *தமிழ் சர்வதேச ஆராய்ச்சி இதழ்*, தொகுதி. 3, எண். S-1, ஜூன் 2021, பக். 83-89. doi:10.34256/irjt21s113

[8] கலியாண சுந்தரனார், திரு. வி. “புறநானூற்றில் புதிய வெளிச்சம்.” *தமிழ்சாரல் கட்டுரைத் திரட்டு* (முதற்பகுதி), அரசி புக் டிப்போ, மயிலாப்பூர், சென்னை – 600 004, 1969.

[9] சுப்ரமணியம், ச. வே. *தமிழ் இலக்கிய வரலாறு*. மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை, 1999.

[10] "ஒரு குறிப்பு." புதுவை திராவிட இயக்கம், புதுவை.

[11] புலியூர் கேசிகன். *குறுந்தொகை மூலமும் உரையும்*. சரண் புக் ஹவுஸ், சென்னை - 7.

[12] ஔவை சு. துரைசாமிப்பிள்ளை. *நற்றினை மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2003.

[13] ஓம்வெட், கெயில். "ஜோதிராவ் பூலே மற்றும் இந்தியாவில் சமூகப் புரட்சியின் சித்தாந்தம்." *எகனாமிக் அண்ட் பொலிட்டிகல் வீக்லி*, 11 செப்டம்பர் 1971.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 3, Issue - 2, May 2024 E-ISSN: 2583-0481

# A Study of Archaeological Artifacts in Comparison to Sangam Lyrics

**Dr. A. Rajalakshmi,** Assistant Professor of Tamil, Kongunadu Arts and Science College, Coimbatore - 641029.
**ORCiD: https://orcid.org/0000-0002-2191-4384**
**DOI: 10.5281/zenodo.11553508**
**Received:** 10 March 2024; **Revised:** 09 April 2024; **Accepted:** 21 April 2024; **Available Online** 30 May 2024.

## Abstract

*Many changes have been taking place in nature since the beginning of the world. Scholars present their ideas with proofs of the existence of different species of life since the creation of the world. Archaeologists give proof through the evidence of ancient artefacts of the men who lived as nomads at the beginning of a civilized society and the development of man for many thousand years. In the world of archaeology, one can see rare proof that the Tamil civilization all over the world and the society has been superior to all societies of the world with great cultural heritage and literary works. The Tamil language is very ancient and it has been a hypothetical state to define when it originated. It is estimated to be about ten thousand years old or more. When time cannot define it, Tamil Kudi is defined as 'Vikhakudi' which appeared at the time when stone and soil appeared in the world. The ancient language spoken by those ancient inhabitants of the world was Tamil. If one wants to say the unimaginable pride of the Tamils, "Born like that Tamil is our mother". Moreover, the ancients used to say the pride of the Tamils was 'Paavai' who was born in Poruppi and lay in the glory of Tennan (Pandian). The Sangam literary works like "Ettuthogai" and "Pattuppattu" are one of such proofs. So, the lives of ancient people are exemplified as great treasures in such works. The Sangam literary songs also match the pottery and paintings found as archaeological artefacts in the excavations done in Tamil Nadu and other parts of India. The main idea of this study is to match some of the symbols found in pottery and paintings found in the excavation artefacts with the selected Sangam literary works.*

**Keywords:** Archaeology, Excavation, Munneer, Navai, Uravon, Valava.

## References

[1] Dr. Tamizhannal. *Tholkappiyam, Porulathigaram*. Manivasakar Publishing House, Chennai, 2003.
[2] Pulavar Kulanthai. *Tholkappiyam, Porulathigaram*. Poombukar Publishing House, Chennai, 2007.
[3] Dr. R. Seyapal, (Editor). *Akananooru* New Century Book House, Chennai, 2004.
[4] Dr. K. Ve. Balasubramaniam, (Editor). *Nattrinai*. New Century Book House, Chennai, 2004.
[5] Dr. A. Dakshinamurthy, (Editor). Kurundogai. New Century Book House, Chennai, April 2004.
[6] Lecture by Dr. Viswanathan (Contributor), New Century Book House, Chennai, 2004.
[7] Dr. R Dakshinamurthy, (Editor), *Aingurunooru*. New Century Book House, Chennai, 2004.
[8] Haviland, William A., Prins, Harald E.L., McBride, Bunny., and Walrath, Dana. *Cultural Anthropology: The Human Challenge* (13th ed.), *Cengage Learning*, 2010. ISBN 978-0-495-81082-7

[9] Sinclair, A. "The Intellectual Base of Archaeological Research 2004-2013: A visualisation and analysis of its disciplinary links, networks of authors and conceptual language." *Internet Archaeology* 42, 2016. https://doi.org/10.11141/ia.42.8
[10] Subramanian, S.V. *Tholkappiyam, Porulathigaram*. Tirunelveli Tirunelveli Thenindia Saivasiddhanta Noolpadipukazhagam Ltd., Tirunelveli-6, 1998.
[11] V. Subha Manickam. *Tamilkadal,* Sri Senbaka Publishing House, 2023.
[12] Sarala Rajagopalan. *Sangha Ilakiyathil Thozhi*. Anbu Pathipagam, Chennai-18, 1986.
[13] N. Subbureddiyar. *Tolkappiyam Kattum Valkai*. Sandhya Pathipagam, 2011.
[14] Puliurkesigan. *Agananuru Moolamum Uraiyum*. Sharada Pathipagam, Chennai, 2010.
[15] Nirmalavathi. Tamil Ilakanam. Seipani. (BTM 1024), Institut Pendidikan Guru, Malaysia, 26 August 2016.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் - 3, இதழ் - 2, வைகாசி 2055 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சங்கப் பாடல் வரிகளுடன் தொல்லியல் பொருள்கள் – ஒரு பொருத்தப்பாடு

**முனைவர் அ. இராஜலட்சுமி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியலு கல்லூரி, கோயம்புத்தூர்-641109.
ORCiD: https://orcid.org/0000-0002-2191-4384
DOI: 10.5281/zenodo.11553508

**ஆய்வுச்சுருக்கம்**

*உலகம் தோன்றிய நாள் முதல் கொண்டு இயற்கையில் பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. உயிர்ச்சூழல் தோன்றிய காலகட்டத்திலிருந்தே பல்வேறு வகையான உயிரிகள் வாழ்ந்ததைப் பற்றிய பல்வேறு சான்றுகளைப் பல்வேறு அறிஞர்கள் நமக்கு புலப்படுத்துகின்றனர். ஆதியில் மனிதன் நாடோடியாக வாழ்ந்த பிறகே நாகரிக வளர்ச்சி அடைந்த சமுதாயத்தைக் கட்டி எழுப்பினான் என்பதையும் பல ஆயிரம் ஆண்டுகளாக மனிதன் அடைந்த வளர்ச்சியையும் தொல்லியல் துறையினர் பல தொன்மை பொருட்களின் சான்றுகள் மூலம் நமக்குத் தெரியப்படுத்துகின்றனர். முன்னைக்கும் முன்னை தோன்றிய தமிழ்ச் சமுதாயம், உலக சமுதாயங்கள் அனைத்தையும் விட மேலான சிறந்த நாகரிகமும் சீர்த்த பண்பாடும் உயர்ந்த ஒழுக்கத்தையும் கொண்டதாக இருந்துள்ளது என்பதற்குப் பல அரிய சான்றுகள் நமக்குக் கிடைத்து கொண்டே இருக்கின்றன. அகழாய்வுகளில் நமக்குக் கிடைக்கும் பல மண் பானை ஓடுகளில் காணப்படுகின்ற சில குறியீடுகள் சங்க இலக்கிய நிகழ்வுகளுடன் பொருத்தி பார்ப்பதே இவ்வாய்வின் தலையான கருதுகோளாக அமைகின்றது.*

**கலைச்சொற்கள்**: தொல்லியல், அகழாய்வு, முந்நீர், நாவாய், உரவோன். வளவ.

**முன்னுரை**

தமிழ்மொழி மிகத்தொன்மையானது. இதன் தோற்றம் எப்போது என யாராலும் வரையறுத்துச் சொல்ல இயலவில்லை. ஏறக்குறைய பத்தாயிரம் ஆண்டுகள் பழைமை உடையது என்பர். காலத்தை வரையறுக்க முடியாத நிலையில், *கல்லும் மண்ணும் தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்தக்குடி* எனத் தமிழ்க்குடியை எல்லைப்படுத்துவர். அந்தத் தொன்மைக் குடியினர் பேசிய தொன்மையான மொழி தமிழ்மொழி. “என்று பிறந்தவள் எங்கள் தாய்” என்று நினைத்துப் பார்க்க முடியாத தமிழின் பெருமையைக் கூறுங்கால், பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து இருப்பிலே இருந்த பாவை என்று முன்னோர் தமிழின் பெருமையைக் கூறிச் சென்றனர். இத்தகு தொன்மைத் தமிழ் இளமையோடு இயங்குவதற்குச் சான்றாகத் திகழ்பவை சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த இலக்கியங்களில் பண்டைய மக்களின் வாழ்க்கை பெரும் பொக்கிசமாக எடுத்துக்காட்டப்படுகின்றன. அந்த வகையில் சங்க இலக்கிய

பாடல் வரிகள் தொல்லியல் பொருளாகக் கிடைத்த மண்பாண்ட ஓவியங்களுடன் பொருத்தப் போகின்ற தன்மை இங்குக் காட்டடப்படுகின்றது.

**சங்க இலக்கியச் சிந்தனைகள்**

உலக இலக்கியங்களுள் செவ்வியல் தன்மையுடன் திகழ்பவை சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியத்தின் தலையாய சிறப்பு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலப்பிரிவுகளும் அவற்றையொட்டியமைந்த மக்கள் பிரிவுகளும், திணை, துறை காட்டும் பழக்க வழக்கங்களும், ஒழுகலாறுகளும் ஆகும். முதன் முதலில் குறிஞ்சி நிலத்தில் வாழ்க்கையைத் தொடங்கிய குன்றக்குறவரான தமிழன் எவ்வாறு படிப்படியாக சமுதாயத்தில் பல்வேறு மாற்றங்களை நிகழ்த்தினான், சமுதாயத்தைக் கட்டியமைத்துக் கடலையும் ஆற்றையும் வென்று ஆளுமை செலுத்தினான் என்பதைச் சங்க இலக்கியங்கள் பெருமிதத்துடன் எடுத்துக்கூறுகின்றன.

**தொல்லியல்**

> **தொல்லியல் என்பது பொருள்சார் பண்பாட்டை அகழ்ந்தெடுத்து தொன்மைக்கால மாந்தர் செயல்பாட்டைப் பகுப்பாய்வு செய்யும் அறிவியல் புலமாகும். இவ்வகைப் பொருள்சார் பண்பாட்டுத் தொல்லியல் ஆவணங்களில் கட்டிடக்கலை, தொல்பொருட்கள், தொல்லுயிர் எச்சம், மனித எச்சங்கள், சூழலியல் எச்சங்கள் ஆகியன உள்ளடங்கும். எனவே தொல்லியலை சமூகவியல் கிளைப்புலமாகவும் மாந்தவாழ்வியல் கிளைப்புலமாகவும் கருதலாம். (சின்க்ளேர், 2016),**
>
> **ஐரோப்பாவில் தனிப்புலமாகவும் பிறபுலங்கள் சார்ந்த கிளைப்புலமாகவும் பார்க்கப்படுகிறது; வட அமெரிக்காவில், தொல்லியல் மானிடவியலின் கிளைப்புலமாகவே நோக்கப்படுகிறது. தொல்லியல் என்பது அத்துறையில் பயன்படுத்தப்படும் முறைகள் பற்றி ஆய்வு செய்வதிலும் கடந்தகாலம் பற்றிய கோட்பாட்டு மற்றும் தத்துவம் சார்ந்த அடிப்படைகள் தொடர்பான ஆய்வு செய்வதிலும் கவனம் செலுத்தப் படுகிறது. (ஹேவிலாண்ட் et al. ப. 7, 14)**

**தொல்பொருளியலின் இலக்குகள்**

- **வரலாற்றுக்கு முந்தைய மற்றும் வரலாற்றுக் கால மனிதப் பண்பாட்டின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் ஆவணப் படுத்தல் மற்றும் அவற்றை விளக்குதல்.**
- **பண்பாட்டு வரலாற்றைப் புரிந்து கொள்ளுதல்.**
- **பண்பாட்டுப் படிமுறை வளர்ச்சியைக் கால வரிசைப்படுத்தல்.**
- **மனித நடத்தைகள் பற்றி ஆய்வு செய்தல்.**

**தொல்லியல் பொருள்கள்**

பாறை ஓவியங்கள், கல்வெட்டுகள், கல்திட்டைகள், கற்பதுக்கைகள், நடுகற்கள்,

அகழாய்வின் போது கிடைக்கக்கூடிய மண் பானை ஓடுகள், காசுகள் செப்பேடுகள், தாழிகள் போன்ற இன்னும் பல ஆதாரங்கள் மூலம் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டுச் சூழலை இன்று நாம் உணர முடிகின்றது.

**அழகன் குளம்**

அழகன் குளம் அகழாய்வில் குறியீடுகளுடன் கூடிய பானை ஓடுகள் பல சிறு சிறு பகுதிகளாக நமக்குக் கிடைக்கின்றன. அந்தக் கீரல் உணர்த்தும் குறிகளைச் சங்க இலக்கியப் பாடல்களுடன் பொருத்திப் பார்ப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கப்பல் குறியீடு**

கீழே படத்தில் உள்ள கப்பல் குறியீட்டினை அகத்தின் வாயிலாகவும் புறத்தின் வாயிலாகவும் இருக்கக்கூடிய சங்க இலக்கிய பாடல்களுடன் பொருத்திப் பார்க்கலாம்.

**படம் - 1**

**கப்பல் குறியீடு - ஆலங்குளம்- ராமநாதபுரம்**




தமிழர் வாழ்வினை அகம், புறம் எனப் பிரித்து வாழ்ந்தனர். ஒத்த அன்புடைய தலைவன் தலைவி இடையே நிகழும் காதல் உணர்வை, பிரிதொருவருக்குக் கூறமுடியாத உணர்வுகளை அகம் எனவும், வீரம், கொடை, கல்வி, வெற்றி போன்றவற்றைப் புறம் எனவும் நம் முன்னோர்கள் பிரித்துள்ளனர்.

**மூன்று பொருள்கள்**

நிலமும் பொழுதும் ஆகிய முதல் பொருளின் அடிப்படையில் அமைந்த திணையில் வாழக்கூடிய உயிரினங்கள், மனிதர்கள், அவர்களது தொழில், உணவு போன்றவற்றைக் கருப்பொருளாகக் கொண்டும், தலைவன் தலைவியின் உணர்வுகளை உரிப்பொருள் என்றும் பிரித்துள்ளனர் நம் முன்னோர்கள்.

**அகத்திணை வாயிலாக**

ஊடலும் கூடலும் ஆகிய உரிப்பொருட்கள் தனி வகையில் நிற்கும்பொழுது பிரிவினை அடிப்படையாகக் கொண்ட பிரிதலும் இரங்கலும் இருத்தலுமாகிய மூன்றும் ஒரு வகையின் கீழ் கொள்ளலாம். இதில் தலைவன் பிரிந்து சென்றதை நினைத்து வருந்தி இருத்தலை இருத்தல் என்றும், அதனை எண்ணி பிறர் இரங்குதலை இரங்குதல் என்றும் கூறுகின்றோம். கடற்கரையில் உள்ள பல கப்பல்களைக் காணுகின்ற நெய்தல் நிலத் தலைவி, தலைவன் இதேபோல் ஒன்றில் ஏறி கடல் கடந்து சென்றுள்ளதை நினைத்து வருந்துகிறாள். தலைவனுடன் தான் செல்ல இயலாததை நினைத்தும் வருந்துகிறாள். அன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் கடல் கடந்து செல்லக் கூடாது என்பதும், ஆண்கள் அவ்வாறு பெண்களை அழைத்து செல்வதில்லை என்பதையும் **முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை** (தொல்காப்பியம்) என்ற தொல்காப்பிய நூற்பா நமக்குப் புலப்படுத்துகின்றது.

**மகிழ்ச்சியும் வருத்தமும்**

ஐங்குறுநூற்றின் ஒரு பாடலில் திருமணத்திற்கு வேண்டிய செல்வங்களைப் பெறுவதற்காக தலைமகன் சில நாட்கள் தலைவியைப் பிரிந்து சென்றவன் மீண்டும் தலைவியைக் காண வருகின்றான். அதன் மகிழ்ச்சியைத் தோழியிடம் கூறும் போது,

**கோடு புலம் கொட்ப, கடல் எழுந்து முழங்க,**
**பாடு இமிழ் பனித் துறை ஓடு கலம் உகைக்கும்**
**துறைவன் பிரிந்தென, நெகிழ்ந்தன,**
**வீங்கின மாதோ – தோழி! என் வளையே! (ஐங்குறுநூறு. 192)**

சங்குகள் கடற்கரையில் வந்து உலாவும், கடலில் அலைகள் எழுந்து ஆரவாரிக்கும், ஒளிமிகுந்த துறையில் கலங்கள் ஓடுமாறு செலுத்தும் துறையினை உடையவன் நமது தலைவன். அவன் பிரிந்த பொழுது நெகிழ்ந்த வலையல்கள் இப்பொழுது மீண்டும் அழகு உற்றன என்று கூறுகிறாள். தனது அழகு தன்னோடு இருக்க வேண்டுமானால் தலைவன் எப்பொழுதும் தன்னுடன் இருக்க வேண்டும். தன்னைப் பிரிந்து சென்றது அவனது பெரிய தவறு என்றும் கூறுகிறாள். மேலும், குறிப்பினால் பரதவர் கடல் கோடு போல எழுந்து முழங்கவும் அதனானே அலைகள் ஆரவாரிக்கும் பணித்துறையில் மரக்கலத்தை பரதவர்கள் அஞ்சாமல் செலுத்தினர் என்பது, தலைவனும் அலர் தூற்றிய நொதுமலர் வரைவு (வேறு

மணம்) முடிக்காமல் தடுப்பதற்காக நமது சுற்றத்தார் மகிழ்ச்சி பொங்க திருமணத்திற்கு ஏற்பாடு செய்திருக்கின்றான் என்று மகிழ்ச்சியுடன் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**பாடலும் குறியீடும்**

தலைவன் சென்றுள்ள கலத்தை நினைத்து தன்னிடம் இருக்கக்கூடிய பொருளான மண்பானையில் கூர்மையான நுனி கொண்ட ஏதோ ஒரு பொருளை வைத்து தான் கண்முன் கண்ட ஏதோ ஒரு கலத்தை வரைந்து தலைவன் மீதான ஏக்கத்தையும் அவன் திரும்பி வராததற்கான வருத்தத்தையும் தீர்த்துக் கொண்டதாக இப்படத்தை நான் காண்கிறேன்.

**புறத்திணை வாயிலாக**

தமிழ் சமுதாயமானது கடல் கடந்து வாணிபம் செய்த செய்தியினை நாம் அறிவோம். மேற்கண்ட படத்திலுள்ள கீரல் உணர்த்துவதாக முந்நீர், நாவாய் என்ற இரு சொற்களை மட்டும் எடுத்துக்கொண்டு சங்க இலக்கியங்களில் அவை எடுத்தாளப்பட்ட இடங்களும் அவற்றின் மூலம் நாம் அறியக்கூடிய செய்தி ஏதேனும் ஒரு வகையில் சமுதாயப் பண்பாட்டுச் சூழலியலுடன் சம்பந்தப்பட்டு உள்ளதையும் ஆராய்வதே இதன் கருதுகோள் ஆகும்.

**முந்நீர்**

சங்க இலக்கியங்களில் முந்நீர் என்ற சொல் 38 இடங்களிலும் நாவாய் என்ற சொல் 11 இடங்களிலும் வந்துள்ளன.

**நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!**
**களியல் யானைக் கரிகால் வளவ!** (புறநானூறு. 66)

மேற்கண்ட புறநானூற்றின் 66 ஆவது பாடல் வரிகளில், கரிகால் சோழனின் முன்னோர் காற்றின் திசை அறிந்து கப்பல் செலுத்தும் முறையினை அறிந்து வைத்திருந்தனர் என்னும் செய்தியைக் காணலாம்.

**ஹிப்பாலஸ் பருவக்காற்று**

கி.பி. முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஷ் என்னும் கிரேக்க மாலுமி, பருவக் காற்றின் உதவியினால் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு நேரே விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்ததனால், யவனக் கப்பல்கள் விரைவாக, அதிகமாக சேரநாட்டு முசிறித் துறைமுகத்திற்கு வந்தன. யவனர்கள் காற்றின் வழியை அறிந்து கப்பல் செலுத்தும் முறையைப் பொது ஆண்டிற்குப் பின்பு தான் அறிந்து இருந்தனர். ஆனால், தமிழ் சோழ மன்னர்கள் பொது ஆண்டிற்கு முன்பே காற்றின் தொழில் அறிந்து கப்பல் செலுத்தினர் என்பதைப் புறநானூற்றின் பாடல் வழி அறிகின்றோம்.

**பாடலும் குறியீடும்**

மேலே, குறிப்பிட்டுள்ள கப்பல் குறியீடானது புறத்தின் வாயிலாக பார்க்கும்பொழுது ஒரு ஆண்மகன் போருக்காக அல்லது பொருளுக்காக கடல் கடந்து

செல்வதனைக் கருத்தில் கொண்ட குயவன் அந்தக் கலத்தினைப் பானை வனையும் போது கீறி இருக்கலாம் என்று நான் கருதுகின்றேன்.

**யானையும் - யா மரமும்**

கீழே உள்ள படத்தில் கண்ட பானை ஓட்டில் ஒரு யானையும் அருகில் ஒரு மரமும் இருப்பதாகக் கீறப்பட்டுள்ளது. இக் குறியீட்டினை நான் குறுந்தொகைப் பாடலின் வழியாக பொருத்திப் பார்க்கின்றேன்.

**படம் - 2**

**யானையும் அருகில் ஒரு மரமும்**



குறுந்தொகைப் பாடல் ஒன்றில் தலைவியைத் தலைவன் வரைவிடை வேண்டி பிரிந்து செல்கின்றான். அதனை நினைத்து வருத்தமுற்ற தலைவியைக் கண்ட தோழி, பிறர் அறியாதவாறு உள்ளுறையாகவும் இறைச்சியாகவும் கூறுகின்றாள்.

**இறைச்சி**

உரிப்பொருளுக்குள் மேலும் ஒரு குறிப்புப் பொருள் அமைந்திருக்குமானால், அது இறைச்சி எனப்படும். இது அகப்பாடலில் மட்டுமே வரும்.

**நசைபெரிது உடையர் நல்கலும் நல்குவர்**
**பிடிபசி களைஇய பெருங்கை வேழம்**
**மென்சினை யாஅம் பொளிக்கும்**
**அன்பின தோழிஅவர் சென்ற ஆறே (குறுந்தொகை. 37)**

யானை தன் பெண்யானையின் பசியைப் போக்குவதற்காக யா மரத்தின் பட்டையை உரித்து அதிலுள்ள ஈரச்சுவையைப் பருகச்செய்யும். அத்தகைய வழியில் செல்லும் தலைவன் விரைவில் வருவான் எனத் தோழி, தலைவியை ஆற்றுவிக்கிறாள் என்பது உரிப்பொருளாகும். தலைவன் இந்த அன்புக் காட்சியைப் பார்ப்பான். உடனே திரும்பி வந்து தலைவியின்

துன்பத்தைத் தீர்ப்பான் என்பது அதிலுள்ள உரிபொருளுக்குள் உள்ள குறிப்புப் பொருளே இறைச்சி ஆகும்.

**பாடலும் குறியீடும்**

மேற்கண்ட இந்தப் பாடலையும் குறியீட்டையும் ஒப்பிட்டு பார்க்கும் போது தன்னுடன் நீர் துறைக்கு வந்த பிற பெண்கள் அறியாதவாறு தலைவிக்குத் தனது குறிப்பினைத் தோழி, மண்பானையில் வரைந்து காட்டி இருக்கலாம் என்பதாக நான் எண்ணுகின்றேன்.

**தினைப்புணம் காத்தல்**

இப் படத்தில் உள்ள பானை ஓட்டில் இரு பெண் உருவங்களும், அவர்கள் கையில் ஏதோ ஒரு பொருளை வைத்திருப்பது போலவும் அவர்கள் வயல் வெளியில் இருப்பதைப் போலவும் உருவாக்கப் பட்டுள்ளது.

**படம் - 3**

**பானை ஓட்டில் இரு பெண் உருவம்**



இக்குறியீட்டினை அகநானூற்றுப் பாடலின் வழியாக பொருத்திப் பார்ப்போம்..

**அகநானூறு**

**மெய்யிற் றீரா மேவரு காமமொடு**
**எய்யா யாயினும் உரைப்பல் தோழி,**
**கொய்யா முன்னுகு குரல்வார்பு தினையே,**
**அருவி யான்ற பைங்கால் தோறும்**
**இருவி தோன்றிய பலவே, நீயே**
**முருகுமுரண் கொள்ளுந் தேம்பாய் கண்ணிப்**
**பரிபன் னாயொடு பன்மலைப் படரும்**
**வேட்டுவற் பெறலோ டமைந்தனை, யாழநின்**
**பூக்கெழு தொடலை நுடங்க வெழுந்து**
**கிள்ளைத் தெள்விளி யிடையிடை பயிற்றி**

**ஆங்காங் கொழுகா யாயின், அன்னை**
**சிறுகிளி கடிதல் தேற்றா ளிவளெனப்**
**பிறர்தந்து நிறுக்குவ ளாயின்**
**உறற்கரி தாகுமவன் மலர்ந்த மார்பே. (அகநானூறு. 28)**

தலைவன் பொருள் பெறுதல் நோக்கத்தோடு தலைவியைப் பிரிந்து சென்றான்; தலைவனையே நினைத்து தினைப்புனம் காத்தலையும் கைவிட்டாள். அதனை அறிந்த தோழி, “அடிக்கடி எழுந்து சென்று கிளிகளை ஓட்டும் தெளிந்த ஒலிகளை இடையிடையே எழுப்பி ஆங்காங்கே சென்று வருதல் வேண்டும். அவ்வாறு சென்று வாராது போனால் நம் அன்னை, சிறுகிளி ஓட்டுதலை இவள் தெளிவாக அறியமாட்டாள்’ எனக் கருதித் தினைப்புனக் காவலுக்குப் பிறரைக் கொண்டுவந்து நிறுத்துவாள்; அவ்வாறு நிறுத்துவாளாயின் நீ தலைவனது அகன்ற மார்பினைப் பின் அடைவது அரியதாகும். தினை காத்தலை இருவரும் கைவிடாமல் நமது பணியைச் செவ்வனே செய்ய வேண்டும்” எனத் தலைவியிடம் கூறுகின்றாள் போன்ற காட்சி அளிக்கிறது.

**பாடலும் குறியீடும்**

மேற்குறிப்பிட்ட பாடலையும் மேற்கண்ட குறியீட்டையும் கொண்டு தினை முற்றி விளைந்த இடத்தில் தலைவனை எண்ணி வருந்தி இருக்கின்ற தலைவிக்குத் தோழி தினைப் புனத்தில் நின்று கொண்டு அறிவுரை கூறுவதைக் கண்ணுற்ற குயவன் அக்காட்சியைப் பானையில் ஒரு நிகழ்வாக அமைத்திருக்கலாம் என்பதாக நான் எண்ணுகின்றேன்.

**குதிரை வீரன்**

படத்தில் கண்ட பானை ஓட்டில் குதிரை மேல் ஒருவர் இருப்பதைப் போன்ற காட்சி ஒன்று கீறப்பட்டுள்ளது.

**படம் - 3**

**குதிரை மேல் வீரன் இருப்பதைப் போன்ற காட்சி**



இக்குறியீட்டினை ஐங்குறுநூறு பாடலின் வழியாகப் பொருத்திப் பார்ப்போம்.

**வரி நுணல் கறங்க, தேரை தெவிட்ட,**

**கார் தொடங்கின்றே காலை; இனி, நின்**
**நேர் இறைப் பணைத் தோட்கு ஆர் விருந்து ஆக,**
**வடி மணி நெடுந் தேர் கடைஇ,**
**வருவர் இன்று, நம் காதலோரே. (ஐங்குறுநூறு.468)**

தலைவன் நீண்ட நாள்களாக பிரிந்திருந்த பொழுது தலைவி அவனை எண்ணி வருந்தினாள். அப்போது, கார்ப்பருவம் வந்ததைச் சுட்டி, 'இன்றே வருவார் தலைவர்'' என்று சொல்லித் தோழி தேற்றினாள். மண்ணுள் மறைந்து வாழும் நுணலும் நீர்நிலைகளில் வாழும் தேரையும் மழை தோன்றும் அறிகுறி கண்டு ஒலி செய்தன. அதனால் கார்காலம் தொடங்கிவிட்டதை அறிந்துக்கொண்ட தோழி, "இனி நம் காதலர் உன்னைக் கலங்காமல் மகிழ்விக்க, நன்கு ஓசையைத் தரும் மணிகள் கட்டிய நெடிய தேரில் வருவார்" என்று கூறுகின்றாள்.

**பாடலும் குறியீடும்**

மேற்கண்ட பாடலையும் மேற்கண்ட குறியீட்டையும் ஒத்து பார்க்கும்பொழுது, தலைவி தலைவனைப் பிரிந்து வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய வேளையில் தலைவன் வந்துவிட்டான் என்பதைப் பிறர் அறியாமல் குறிப்பாகக் கூற வேண்டிய தோழி, தன் கையிலிருக்கும் பானையில் தலைவன் குதிரைமேல் வருவதாக வரைந்து காட்டுயுள்ளாள் என்பதை நான் எண்ணுகின்றேன். சங்க இலக்கியங்களில் பல பாடல்கள் தலைவன் இடைச் சுரத்திலிருந்து திரும்புவதாகவும், பாலைநிலத்தில் இருந்து திரும்புவதாகவும், பாசறையில் இருந்து திரும்புவதாகவும் அவன் விரைந்து வந்து தலைவியை மணம் முடிக்க காத்திருக்கின்றான் என்றும் கூறுகின்றன. தேரானது குதிரையால் கட்டப்பட்டிருக்கும். தேரேறி தலைவன் வருகிறான் என்பதையே குதிரைமேல் தலைவனை வரைந்துக் காட்டியுள்ளாள் என்பதாக நான் உணர்கின்றேன்.

**வளமையின் குறியீடு**

கீழ் கண்ட பானை ஓட்டில் வளமையின் குறியீடாக பெண்ணும், அப்பெண்ணைச் சுற்றி பிற உயிரினங்களும் இருப்பதைப் போன்ற காட்சி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

**படம் - 3**

**ஒரு பெண்ணும், அப்பெண்ணைச் சுற்றி பிற உயிரினங்களும் இருப்பதைப் போன்ற காட்சி**



இக்குறியீட்டினை நான் தொல்காப்பிய நூற்பா வழியாகப் பொருத்திப் பார்க்கின்றேன்.

**தொல்காப்பியம்**

தொல்காப்பியத்திலும் முன்னர் கண்ட குறியீட்டினை தழுவிய பாடல் வரிகளை காண முடிகின்றது. அவை பின்வருமாறு:

**ஒன்றறிவு அதுவே, உற்று அறிவதுவே,**
**இரண்டறிவு அதுவே, அதனொடு நாக்கே,**
**மூன்றறிவு அதுவே, அவற்றொடு மூக்கே,**
**நான்கறிவு அதுவே, அவற்றொடு கண்ணே,**
**ஐந்தறிவு அதுவே, அவற்றொடு செவியே,**
**ஆறறிவு அதுவே, அவற்றொடு மனனே,**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே (தொல்.பொருள். மரபியல்)**

படம் - 3ல் நாம் கண்ட பானை ஓட்டில் உள்ள பெண் மற்றும் இதர உயிரினங்களை சுட்டும் விதமான பாடல் தமிழ் பாரம்பரியத்தின் தொன்மையை விளக்கும் விதமாய் அமைகிறது. கீழே உள்ள விளக்கம் அவைதனை தெளிவு படுத்துமாறு அமைகிறது.

- **ஓரறிவு கொண்ட உயிரினங்கள்: மரம், செடி, கொடி, புல், பூண்டு போன்ற தாவர இனங்கள்.**
- **ஈரறிவு கொண்டு உயிரினங்கள்: நத்தை, சங்கு (இதற்கு உடல், வாய் ஆகிய இரண்டு உறுப்புகள் மட்டுமே உள்ளது.)**
- **மூவறிவு: எறும்பு, கரையான், அட்டை**
- **நாலறிவு: நண்டு, தும்பி, வண்டு**
- **ஐயறிவு: விலங்குகள், பறவைகள்**
- **ஆறறிவு: மனிதர்கள்**

மேற்கண்ட நூற்பாவின் வழி குறிப்பிடப்படுகின்ற அந்தப் பானை ஓவியமானது ஓரறிவு தாவரத்தையும், ஈரறிவாக நண்டினையும், ஐந்தறிவான பறவையும் விலங்கையும், ஆரறிவான மனிதனையும் குறிப்பதாக உள்ளது.

**சங்கப்பாடலும் குறியீடும்**

பானை ஓவியத்தைச் சங்க இலக்கியத்துடன் ஒப்பிட்டு பார்க்கும் போது, பெண்கள் கூற்றுப் பாடல்களின் வழியாக அவர்களின் கருத்துக்கள் அனைத்தும் தங்களின் திணையை ஒட்டி அமைந்த கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டே பெரும்பாலும் பாடப்படுவதாக அமைகின்றன. மேலே குறிப்பிடக்கூடிய பெண்ணானவள் தலைவியாகவும் தோழியாகவும் நாம் கருத்தில் கொண்டால் அவர்களது பாடல்களில் பெரும்பாலும் நீர் வாழ் உயிரினங்களையும் நிலத்தில் வாழக்கூடிய உயிரினங்களையும் மையமாகக் கொண்டு பாடப்பட்டதாக அமைகின்றன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறியீட்டினைத் திணை வாழ்

உயிரினங்களின் அடிப்படையில் பார்க்கும் பொழுது, ஓவியத்தில் உள்ள தாவரத்தினைத் தினைக்கதிராகக் கொண்டால் அது குறிஞ்சித் திணையையும் தாவரத்தின் மேல் உள்ள பறவையை நாரையாகக் கொண்டால் அது மருதத்திணைக்கும், மானை முல்லை நிலத்து விலங்காகவும், ஆமையை நெய்தல் நிலத்து உயிரியாகக் கருத்தில் கொள்ளும் பொழுது தலைவியோ அல்லது தோழியோ தங்களைச் சுற்றி இருக்கக்கூடிய திணை அமைப்பில் கருப்பொருட்களைக் கருவாகக் கொண்டு பாடல்கள் பாடியுள்ளனர் என்பதை அகப்பாடல்கள் பலவற்றையும் அடிப்படையாகக் கொண்டு காணலாம். வளமையின் குறியீடாக காணப்படுகின்ற இந்த மண்பானை ஓடானது மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையையும் திணையுடன் மயங்கிய வாழ்க்கையையும் வாழ்ந்தான் என்பதும் பெறப்படுகின்ற செய்தியாகும். பெண்களின் வாழ்வானது பெரும்பாலும் அவர்களது நிலங்களை ஒட்டியே அவர்களின் வாழ்க்கைமுறை அமைந்து இருந்தது என்பதையும் நாம் அறியலாம்.

**முடிவுரை**

அழகன்குளம் அகழாய்வில் நமக்குக் கிடைக்கக்கூடிய பானை ஓவியங்களையும் பானை கீறல்களையும் சங்க இலக்கியப் பாடல்களின் வழியாக நான் ஒப்பிட்டுப் பார்த்துள்ளேன். மேலே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு பானைகளையும் வேறு ஒரு பார்வை கொண்டு வேறு ஒரு கண்ணோட்டம் கொண்டு பார்க்கும் பொழுது சங்க இலக்கியத்தில் வேறு சில பாடல்களுடன் பொருத்திப் பார்க்கலாம். கப்பல் வரைந்த மண்பானை ஓட்டைக்கொண்டு பார்க்கும் பொழுது சங்க இலக்கியங்களில் 32 இடங்களில் முந்நீர் என்ற சொல்லும் 11 இடங்களில் நாவாயும் வருவதாக அறிகின்றேன். அதனடிப்படையில் அந்தக் குறியீடு தொடர்பான இன்னும் பிற செய்திகள் நமக்குக் கிடைப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. அதுபோலவே குதிரைமேல் வருகின்ற வீரனை மடல் ஏறக்கூடியவனாக கருத்தில் கொண்டால் அதற்கான பாடல்களையும் எழுதலாம். யானை தொடர்பான பல சங்க இலக்கியப் பாடல்கள் அமைந்துள்ளன. தினைப்புனம் காப்பதாகக் கூறப்பட்ட அந்த ஓட்டிலுள்ள ஓவியத்தை வயல்வெளியில் வேலை செய்யக் கூடிய பெண்களாகக் கருத்தில் கொண்டால் அது தொடர்பான பல பாடல்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. மண்பானை ஓவியத்தை வரலாற்றின் அடிப்படையில் மக்கள் வாழ்ந்த கால சூழ்நிலைக்குத் தகுந்த பண்பாட்டையும் அந்தக் காலத்தையும் குறிக்கின்ற தொல்லியல் ஆய்வினைச் சங்க இலக்கியப் பாடல்களுடன் பொருத்திப் பார்க்கும் போது யார் யார் வரைந்திருக்கலாம்? எந்த சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கலாம்? என்ற பார்வையின் கீழ் உள்ளதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**துணை நூற் பட்டியல்**

[1] முனைவர் தமிழண்ணல். *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 2003.

[2] புலவர் குழந்தை. உரை, *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* பூம்புகார் பதிப்பகம், சென்னை. டிசம்பர் 2007.

[3] முனைவர் இரா. செயபால். (உரையாசிரியர்) *அகநானூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை, 2004.

[4] முனைவர் கு. வே. பாலசுப்பிரமணியம் (உரையாசிரியர்). *நற்றிணை.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, ஏப்ரல் 2004.

[5] முனைவர் ஆ. தட்சிணாமூர்த்தி (உரையாசிரியர்). *குறுந்தொகை,* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை, ஏப்ரல் 2004.

[6] முனைவர் விஸ்வநாதன் (உரையாசிரியர்). *கலித்தொகை.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, ஏப்ரல் 2004.

[7] முனைவர் ஆர். தட்சிணாமூர்த்தி, (உரையாசிரியர்). *ஐங்குறுநூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, ஏப்ரல் 2004.

[8] ஹவிலாண்ட், வில்லியம் ஏ., பிரின்ஸ், ஹரால்ட் இ.எல்., மெக்பிரைட், பன்னி., மற்றும் வால்ராத், டானா. *கலாச்சார மானுடவியல்: மனித சவால்* (13வது பதிப்பு), செங்கேஜ் கற்றல், 2010. ISBN 978-0-495-81082-7

[9] சின்க்ளேர், ஏ. "தொல்பொருள் ஆராய்ச்சியின் அறிவுசார் அடிப்படை 2004-2013: அதன் ஒழுங்குமுறை இணைப்புகள், ஆசிரியர்களின் நெட்வொர்க்குகள் மற்றும் கருத்தியல் மொழி ஆகியவற்றின் காட்சிப்படுத்தல் மற்றும் பகுப்பாய்வு." *இணைய தொல்லியல்* 42, 2016. https://doi.org/10.11141/ia.42.8

[10] சுப்புரமணியன் ச. வே. *தொல்காப்பியம் தெளிவுரை.* திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், திருநெல்வேலி - 6, 1998.

[11] வ. சுப. மாணிக்கம். *தமிழ்க்காதல்.* ஸ்ரீ செண்பகா பதிப்பகம், ஜனவரி 2023.

[12] சரளா இராசகோபாலன். *சங்க இலக்கியத்தில் தோழி.* அன்பு பதிப்பகம், சென்னை-18, 1986.

[13] நா. சுப்புரெட்டியார். *தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை.* சந்தியா பதிப்பகம், 2011.

[14] புலியூர்கேசிகன். *அகநானூறு மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை, ஜூன் 2010.

[15] நிர்மலாவதி. *தமிழ் இலக்கணம், செய்பணி.* (BTM 1024), இன்ஸ்டிட்யூட் பெண்டிடிகன் குரு, மலேசியா, 26 ஆகஸ்டு 2016.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 3, Issue - 2, May 2024 E-ISSN: 2583-0481

# A Comparative Study on the Social Thoughts of Periyar and Ingersoll

**Dr. R. Jaisankar**, Associate Professor in Tamil (CDOE), Bharathidasan University, Trichy - 24. Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-2959-6384**
**DOI: 10.5281/zenodo.11553677**
**Received:** 15 March 2024; **Revised:** 20 April 2024; **Accepted:** 29 April 2024; **Available Online:** 30 May 2024.

## Abstract

*Periyar and Ingersoll were born and raised in different countries and different cultural environments. However, it can be seen clearly that the thoughts of both agree on the characteristic elements of fighting against slavery without any sort of compromise or submission to the religious leaders, maintaining self-respect and self-esteem, being serious about complete abstinence from alcohol, fighting for female rights, and maintaining equality among the people. They spoke for the working class people and about their liberty and equality. This article also points out that the two differ in the way they express their views. In general, the two are united in many aspects. Both have abhorred injustice done in the name of God to the people. Ingersoll made logical arguments against the clergy and had put radical logic in the name of humanity at the times that America was stammering to give rights to the Negroes. It is known that in Tamil Nadu, Father Periyar spoke, wrote, protested and went to prison against the ruling powers and their religious rituals that made the people untouchables in the name of caste and upper-class hegemony. It can be seen that Periyar has expressed a very clear vision about democracy. Moreover, both of them indeed advised the people without giving any way for compromise against the chauvinists and religious fanatics and alarm louder for equality and social reformation.*

**Keywords**: Self-respect, Liquor Abstinence, Female Rights, Logic, Equality.

## References

[1] Aravendan, Ira. *Thaikozhi Periyar Ellakiyum.* Kavia Pathipagam, Chennai - 620024, 2013.
[2] Gothai Jyotilakshmi. Vedam Endror Ariviyal. *Dinamani* Daily, 20 - 01 -2023.
[3] Saminatha Sharma, Ve. Mannida Sathiyin Suthathidram (Ingersoll) Edition-2007, Tamil Station, Thiagaraya Nagar, Chennai-600017.
[4] Chidambaranar, Sami. *Tamizhar Thalaivar Periyar*. Sippy Books, Chennai - 600017, 2007.
[5] Sivasubramanian. "Varga Porattamum Panpattu Porattamum." Manarkeni, Issue - 65, January - 2024.
[6] Senguttuvan, P. *Sinthanaiyalar Ingersoll* (Tamil), Sri Senbaga Pathipagam, Chennai - 17, 2005.
[7] Palanidurai, K. "Kootturavu Koottachi Oru Parvaai." *New Century Ungal Moolagam*, Volume 14 Issue 9, December 2022.
[8] Palanithurai, K. "Ambedkar – Kumarapa Karruthiyail Nadaimurai Sathiyam." *New Century Ungal Moolagam*, Volume 14, Issue 11, February 2023.
[9] Puythiya Madhavi. "Purachi Kaviyum Indiya Thesamamum." Manarkeni, Issue – 64, November 2023.
[10] Maluvai Puratchidasan. *Thanthai Periyarin Samuthaya Senthanaigal*. Karpagam Puthagalayam, Chennai-600017, 2019

[11] Muthiah, E. "Panpattu Porulatharam: Karuthiyal Uraiyadal." *Peyal* Half Yearly Journal, Peyal: 10, Thuli: 01, October 2023 – March 2024.
[12] Velusamy, N. *Thanthai Periyarin Ariviyal Sinthanaigal*. Tamil University Publication, Thanjavur - 613010, December- 2009.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

**செங்காந்தள்**

*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்*



மலர் - 3, இதழ் - 2, வைகாசி 2055 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# ஒப்பியல் நோக்கில் பெரியார் மற்றும் இங்கர்சாலின் சமூகச் சிந்தனைகள்

**முனைவர் இரா. ஜெய்சங்கர்**, தமிழ் இணைப்பேராசிரியர் (CDOE), பாரதிதாசன்பல்கலைக்கழகம்,

திருச்சிராப்பள்ளி – 24, தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0000-0002-2959-6384**

**DOI: 10.5281/zenodo.11553677**

**ஆய்வுச்சுருக்கம்**

*பெரியாரும் இங்கர்சாலும் வெவ்வேறு நாட்டில், வெவ்வேறு கலாச்சார பண்பாட்டுச் சூழலில் பிறந்து வளர்ந்தவர்கள். இருப்பினும், இருவரும் சமயத்தலைவர்களிடம் மண்டியிடாமல் அடிமைத்தனத்தை எதிர்த்துப்போராடுதல், சுயமரியாதையைக் கடைப்பிடித்தல், மது ஒழிப்பில் தீவிரம் காட்டுதல், பெண்ணுரிமைக்குப் போராடுதல், மக்களிடம் சமத்துவத்தைப் பேணுதல் ஆகியப்பண்புக் கூறுகளில் இருவரது சிந்தனைகளும் ஒத்துப்போவதைக் காணமுடிகிறது. ஆனால் இருவரும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் பாங்கில் வேறுபடுவதை இக்கட்டுரைச் சுட்டிக்காட்டியுள்ளது. மது, கடவுள் மறுப்பு கொள்கைகளில் சில கூறுகளில் இருவரும் ஒற்றுமை உடையவராகவும், சில கூறுகளில் வேற்றுமை உடையவராகவும் திகழ்கின்றனர். கடவுளின் பெயரில் நடைபெற்ற அநீதியை இருவரும் அடியோடு வெறுத்துள்ளனர். இங்கர்சால் மதகுருமார்களை எதிர்த்து, தர்க்க ரீதியான வாதங்களை முன்வைத்துள்ளார். தந்தை பெரியார் ஆதிக்க சக்திகளையும், அவர்களது மதச் சடங்குகளையும் எதிர்த்துப் பேசி, எழுதி, போராட்டம் நடத்தி சிறைச்சென்றிருப்பதை அறியமுடிகிறது. ஜனநாயகம் குறித்து மிகத் தெளிவான தொலைநோக்கு பார்வையுடையச் சிந்தனையைப் பெரியார் வெளிப்படுத்தி இருப்பதைக் காணமுடிகிறது. மேலும், காலத்துக்கேற்ற அறிவியல் பார்வையும் சமூக சீர்திருத்தமும் தேவை என்பதில் இருவரும் எந்த சமரசத்திற்கும் இடம் கொடுக்காமல் மக்களிடம் அறிவுறுத்தி இருப்பதைக் காணமுடிகிறது.*

**திறவுச்சொற்கள்:** சுயமரியாதை, மது ஒழிப்பு, பெண்ணுரிமை, தர்க்கரீதி, சமத்துவம்.

**முன்னுரை**

தென்கிழக்கு ஆசியாவின் சாக்ரடிஸ் என்று கருதக்கூடியவர் தந்தை பெரியார். இவர் திராவிடச் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அயராது உழைத்தவர். இப்பேரறிஞரின் சமூகச் சிந்தனைகளையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சமூக முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்ட இங்கர்சால் அவர்களின் சமுதாய சிந்தனைகளையும் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. மனிதவாழ்வை உற்று நோக்கும்போது, ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டு பார்ப்பது இயல்பாகவே நடந்துவரக்கூடிய ஒன்றாக உள்ளது. இதன் அடிப்படையில் உருவானதுதான் ஒப்பிலக்கியத் துறையாகும். இக்கட்டுரையில் தந்தைப் பெரியாரின் சமூகச்

சிந்தனைகளும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சமூக முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்ட இங்கர்சாலின் சமூகச் சிந்தனைகளும் ஒப்பிட்டு ஆராயப்பெற்றுள்ளன.

**இருவரின் இளமைப்பருவம்**

**17.09.1879** ஆம் ஆண்டு ஈரோட்டில் மத்திய தர வர்க்கத்தில் ஈ. வெ. ராமசாமி (பெரியார்) பிறந்துள்ளார். இவருக்கு பத்து வயதில் திண்ணைப் பள்ளி படிப்புடன் முறைசார் கல்வி முடிந்ததிருக்கிறது. இதன் பிறகு அவர் சுயமாக வளர்த்துக்கொண்ட பட்டறிவுதான் அவர் வாழ்நிலையைத் தீர்மானித்ததுள்ளது. தந்தை பெரியார் 12-ஆம் வயதில் வியாபாரம் செய்யத் தொடங்கி, 25-ஆம் வயதில் துறவு பூண்டு கல்கத்தா, காசி முதலிய வடநாட்டு ஊர்களுக்குச் சென்றுவந்துள்ளார்.அப்போது அவருக்கு ஏற்பட்ட பயண அனுபவங்கள் அவரது வாழ்வில் பல திருப்புமுனைகளை ஏற்படுத்தியிருப்பதை அறியமுடிகிறது.

**ராபர்ட்கிரின் இங்கர்சால் 14-08-1833 -** ஆம் ஆண்டு நியுயார்க் மாநிலத்தைச் சேர்ந்த ட்ரஸ்டென் என்னும் இடத்தில் பிறந்துள்ளார். இவரின் தந்தையார், **ஜான் இங்கர்சால்** இவர் மதகுருவாக இருந்துள்ளார். இவரின் தயார் **மேரி லிவ்விங்ஸ்டோன்**. இங்கர்சாலின் மீது அவரது அருமை அன்னை கொண்டிருந்த அன்பும் பொறுப்பும் இங்கர்சாலின் நினைவில் வாழ்நாள் முழுவதும் இழைகளாக இருந்திருப்பதைக் காணமுடிகிறது. சமயப்பற்றுள்ள சூழ்நிலையில் இங்கர்சால் வளர்க்கப்பட்டாலும் ஒருபொழுதும் அவர் சமயப் பற்றுடையவராக, இருந்ததில்லை. இங்கர்சாலின் தந்தை தனது எண்ணங்களை மகன் மீது சுமத்தாமல், நீ உனக்கு உண்மையானவனாக இரு, உனது உயர்ந்த எண்ணங்களைக் கூறு, உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறுபவனாக ஒரு பொழுதும் இராதே என்று அறிவுரை வழங்கியிருப்பதை அறியமுடிகிறது. பள்ளிப் பருவத்தில் பல இன்னல்களைச் சந்தித்த இங்கர்சால் சிறப்பான ஆற்றலைப் பெற்றிருந்த காரணத்தால் வழக்கறிஞராகும் தகுதியைப் பெற்றுச் சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்துள்ளார். மேலும், இங்கர்சால் தன்னைவிட மூத்தோர்களிடத்திலும், அறிவும், ஆற்றலும் கொண்டவர்களிடத்திலும் பழகுவதை ஒரு விதியாக வைத்திருந்துள்ளார். இப்பண்பு இங்கர்சாலின் பொது வாழ்விற்குப் பெருந்துணையாக இருந்ததுள்ளது. **1862- ல்** இங்கர்சால் **ஈவாபார்க்** என்பவரை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டுள்ளார். மூடநம்பிக்கையற்ற துணைவியாக இங்கர்சாலுக்கு இவர் அமைந்தது இங்கர்சாலின் பகுத்தறிவுச் சிந்தனைக்கு வலுசேர்ப்பதாக இருந்திருப்பதை அறியமுடிகிறது.

அரசு இராணுவத்தில் சேர்ந்திருந்த இங்கர்சால் திருமணமான ஆறு வாரங்களே ஆன நிலையில் உள்நாட்டுப் போருக்குச் சென்றுள்ளார். கனிவு உள்ளம் கொண்ட இவரால் திறமைமிக்க போர் வீரனாக ஆக முடியவில்லை. இவரது இராணுவ வாழ்க்கை புழுதியை வாரித்தூற்றும் வண்ணமும், அவரை எவ்வளவுக்கு இழிவாகச் சித்தரிக்க முடியுமோ அவ்வளவுக்கு இழிவாகச் சித்தரிக்கும் விதமாக இருந்துள்ளது. இங்கர்சால் தனது கடின உழைப்பினால் முப்பத்து நான்காம் வயதில் இலினாயி மாநிலத்தின் அரசு வழக்கறிஞர்

பணியில் சேர்ந்து திறம்படச் செயல்பட்டுள்ளார். பல பதவிகள் தன்னை நாடி வந்தாலும் சமயத் தலைவர்களிடம் மானத்தைவிட்டு மண்டியிட அவர் விரும்பவில்லை. 1860-ஆம் ஆண்டு இங்கர்சால் தேர்தலில் போட்டியிட்டுத் தேர்தலில் தோல்வியைத் தழுவினாலும், மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி மிகச்சிறந்த சொல்லேருழவராகத் திகழ்ந்துள்ளார்.

**மது ஒழிப்பு பற்றிய நிலைப்பாடு**

மது ஒழிப்பில் தீவிரமாக ஈடுபட்டார் தந்தை பெரியார். அதற்காகச் சிறைக்குச் செல்வதற்கும், தனது உடைமைகளை இழப்பதற்கும் அவர் தயங்கவில்லை. மேலும், தனது குடும்பத்தார்களையும், தொண்டர்களையும் மது ஒழிப்பில் தீவிரமாக ஈடுபடுத்தியுள்ளார். ஆனால், மதுவால் ஏற்படும் தற்கொலைகள், மூளைக் கோளாறுகள், துயரத்தைத் தாங்காத நெஞ்சத்தோடும் கண்ணீரை அருவியென வடிக்கும் கண்களோடும் கலங்கி நிற்கும் தாய்மார்கள், அந்த தாய்மார்களின் கந்தை ஆடையைப் பிடித்துக்கொண்டு கஞ்சிக்கு அழும் பச்சிளஞ்சிறார்கள், ஆகியவர்களை பற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும் என்று இங்கர்சால் அறிவுறுத்தியுள்ளார். **மது ஒழிப்பில் பெரியார் அளவிற்கு** இங்கர்சால் தீவிரக்களப்பணி ஆற்றவில்லை என்பதை அறியமுடிகிறது.

**கடவுள் சிந்தனை**

தந்தை பெரியார் சமய வாதிகளையும், அவர்கள் தங்களுக்குச் சாதகமாக எழுதிவைத்துள்ள இதிகாச புராணங்களையும், மனுநீதி கூறும் வருணா சிரமத் தர்மத்தையும் எதிர்த்தார். வைதிகப் பார்ப்பனிய மதம், சாத்திரங்கள், புராணங்கள், கடவுள்கள் ஆகியவற்றை எதிர்த்தார். ஆதிக்கச் சமயத்தையும், அடிமைத்தனத்தையும் அம்பலப்படுத்தினார்.சாதிவெறி பாகுபாடு நிலவுவதை விமர்சித்தார். மேலும் பகுத்தறிவு நோக்கு, கடவுள் மறுப்பு, சாதிய ஒழிப்பு, சுயமரியாதை கடைப்பிடிப்பு, சமத்துவ நடப்பு ஆகியவற்றை மக்களிடையே அறிவுறுத்தினார். சமதர்மம், சம உடைமை, சமஆட்சித்தன்மை, சமநோக்கு, சம நுகர்ச்சி, சம அனுபவம் என்பவற்றை நிறுவுவதே பெரியாரின் இலட்சியக்கனவாக இருந்திருப்பதை அறியமுடிகிறது. அதற்கு அவர் போராட்ட அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவும் தயங்கவில்லை. வழிபாட்டு உரிமையைவிட வாழ்வுரிமையைப் பெரியார் பெரிதாக மதித்துள்ளார். கடவுளின்றி வாழ்ந்துவிடலாம் ஆனால் ஒழுக்கமின்றி வாழமுடியாது என்பதை அழுத்தந்திருத்தமாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இங்கர்சால் கிருத்துவ மதம் என்ற தனது கட்டுரையில், கடவுள் இருக்கின்றார் என்பதை ஏற்றுக்கொண்டு, கடவுள் கூறியதாக, செய்ததாகக் கூறுபவற்றை ஏற்கவில்லை. மேலும், கடவுளின் பெயரால் நடத்தப்படும் காட்டுமிராண்டி செயல்களுக்கும், கொடுமைகளுக்கும் இடங்கொடுக்காமல் மதவாதிகளுடன் கடுமையான கருத்து மோதல்களிலும், வாதங்களிலும் ஈடுபட்டுள்ளார். எனினும் இங்கர்சால் கிருத்துவ மதத்தின் நற்கொள்கைகளைக் குறைகூறவில்லை. தீய கருத்துக்களையும், குறைபாடுகளையும் சாடியுள்ளார்.

கொள்கைகளுடன் கருத்துக்களுடன் நான் போராடுகின்றேன் மனிதர்களுடனன்று என்பது இங்கர்சால் கூற்றாக அமைகிறது. மதவாதிகளுடன் இவர் மாறுபட்ட கருத்துக்களை கொண்டிருந்தாலும், மற்றவர்களின் மனம் புண்படும்படி ஒருபோதும் செயல்பட்டதில்லை, மாறாக அவர்களிடம் இங்கர்சால் மிகவும் பண்புடன், அன்புடன் நடந்திருப்பதைக் காணமுடிகிறது. கூலி கொடுக்காது மற்றவர்களின் உழைப்பை உறிஞ்சி வாழ்வது சகமனிதர்களை அடிமையாக்குவது, உண்மையை மறுப்பது, எளியோரை நசுக்குவது, அறிவாளிகளைத் தண்டனைக்கு உள்ளாக்குவது, மனசாட்சியை உடைப்பது, இளஞ்சிறார்களின் ஆன்மாக்களை நிரந்தரத் துன்பம் என்னும் மதக்கோட்பாட்டினால் பாழ் படுத்துவது ஆகியவை கடவுள் நிந்தனையாகும் என்பதை கிருத்துவ மதத் தலைவர்களிடம் இங்கர்சால் சுட்டிக்காட்டியுள்ளார்.

**ஜனநாயகம்**

ஜனநாயகம் என்பது மக்களின் நல்வாழ்விற்காக, மக்களாலே ஆளப்படும் ஓர் ஆட்சி முறை என்றாலும், நம் நாட்டு ஜனநாயக முறை முற்றிலும் மாறானதாக உள்ளது. இவற்றில் சமவாய்ப்பு சம அந்தஸ்து பெற முடியவில்லை, மக்கள் பெரும்பாலோரிடம் ஒழுக்கம், நாணயம் என்பது அறவே இல்லாமல் போய்விட்டது.

> **கட்சி, தேர்தல், பெரும்பான்மை, ஜனநாயகம் என்பதெல்லாம் கூட்டுக் கொள்ளை மாதிரி அராஜக ஆட்சி நடைபெறத்தான் இடமளிக்கும். ஆகவே ஜனநாயகம் என்பது ஆளுவோருக்கு நல்ல கொள்ளை வாய்ப்பும் ஆளப்படுவோருக்குப் பெரும் கேடும் அளிக்கத்தக்கதாகும். மேலும் ஜனநாயகத்தில் நீதி செலுத்த ஒரு நாளும் முடியாது என்பது பெரியாரின் கூற்றாக அமைகிறது (தாய்க்கோழி பெரியார் இலக்கியம், ப. 75)**

எனவே, இப்படிப்பட்ட மக்களை ஆளுவோர் மிக எளிதாக ஏமாற்றி, பதவி சுகம் அடைவதைப் **பெரியார்** தெளிவுபடுத்தியுள்ளார். இதன் மூலம் ஜனநாயகம் குறித்த இவரின் தீர்க்கதரிசனமான புரிதலுடைய ஆளுமையை அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் ,

> **மக்களாட்சியை பற்றிய புரிதலை மக்களிடம் உருவாக்காமல், தரகர்களை, ஒப்பந்தக்காரர்களை தலைவர்களாக நம் அரசியல் கட்சிகள் எங்கும் உருவாக்கி மக்கள் பணத்தில் லாபம் பார்க்க கற்றுக் கொடுத்து விட்டனர் (அம்பேத்கர் - குமரப்பா கருத்தியலின் நடைமுறைச் சாத்தியம், ப. 39).**

இக்கருத்தியலும் பெரியார் கருத்தியலும் ஒன்றிப்போவதை காணமுடிகிறது.

இங்கர்சால் அமெரிக்காவில் நிலவிய ஜனநாயக ஆட்சி முறைக்கு உடன்பட்டுத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றுள்ளார். அதன் வழி மக்களுக்குச் சேவையாற்றியுள்ளார். மேலும் இளைஞர்கள் அதிகாரத்தை ஒரு பொருட்டாகக் கருதக்கூடாது. ஆனால் பயனுள்ளவர்களாக சமூகத்திற்கு இருக்க வேண்டும். அதற்கு அரும்பாடுபட வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார். ஆனால் பெரியார் இந்தியாவில் நிலவிய ஜனநாயக முறையில்

நம்பிக்கையற்றவராக இருந்துள்ளார். மேலும், தேர்தலில் தான் நிற்காவிட்டாலும் தனக்குப் பிடித்த அல்லது தனது சிந்தனைக்கு இணக்கமான நபர்களுக்கு ஆதரவு தெரிவித்து அவர்கள் வெற்றி பெறப் பாடுபட்டு இருப்பதை அறியமுடிகிறது.

**சமுதாய சிந்தனைகள்**

சுதந்திரத்தையும், சுயமரியாதையையும் எதிர்பார்க்கும் மனிதன் யாருக்கும் பக்தனாய் இருக்க முடியாது. யாரையும் பக்தியாய் இருக்கச் சொல்லவும் முடியாது. மக்களிடம் உணர்ச்சி, ஒழுக்கம் ஏற்பட வேண்டுமானால் முதலில் சினிமா ஒழிக்கப்பட வேண்டும்.நீதி, நேர்மை ஏற்படவேண்டுமானால் வக்கீல் முறை ஒழிக்கப்பட வேண்டும். அரசியலில் நல்ல ஆட்சியும், நாணயமும் ஏற்பட வேண்டுமானால் தேர்தல் முறை ஒழிக்கப்பட வேண்டும். வியாபாரத்தில் நாணயக் குறைவும், கள்ள வியாபாரமும் ஒழிக்கப்பட வேண்டுமானால் லைசென்சு, பெர்மிட், கட்டுப்பாடு முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பது பெரியாரின் சமுதாய சிந்தனையாக இருந்திருப்பதை அறியமுடிகிறது.

> **ஒரு சமூகத்தின் பொருள் உற்பத்தி முறையும் அது உருவாக்கும் வர்க்கங்களும் இணைந்து அடிமைச்சமுதாயம், நில மானியச் சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம் என்ற சமூக அமைப்புகளை உருவாக்குகின்றன. இச்சமூகங்களின் நிலவும் பொருள் உற்பத்தி முறையும் வர்க்கங்களும் அச்சமுகத்தின் பண்பாட்டின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.(வர்க்க போராட்டமும் பண்பாட்டுப் போராட்டமும், ப.7)**

இச்சிந்தனை பெரியாரின் சிந்தனையுடன் ஒப்புநோக்கத் தக்கதாக அமைகிறது. சினிமா ஒழிக்கப்பட வேண்டும்.நீதி, நேர்மை ஏற்படவேண்டுமானால் வக்கீல் முறை ஒழிக்கப்பட வேண்டும். அரசியலில் நல்ல ஆட்சியும், நாணயமும் ஏற்பட வேண்டுமானால் தேர்தல் முறை ஒழிக்கப்பட வேண்டும். வியாபாரத்தில் நாணயக் குறைவும், கள்ள வியாபாரமும் ஒழிக்கப்பட வேண்டுமானால் லைசென்சு, பெர்மிட், கட்டுப்பாடு முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பது பெரியாரின் சமுதாய சிந்தனையாக இருந்திருப்பதை அறியமுடிகிறது.

**சீர்திருத்த சிந்தனை**

இருவரும் எந்தவொரு மடாதிபதிகளிடமும் மண்டியிடாமல், பகுத்தறிவுக்கு ஒவ்வாத மடாதிபதிகளின் செயல்களை கடுமையாகச் சாடியிருப்பதை அறிய முடிகிறது. மன அமைதிக்கும், நிறைவுக்கும் மதத்தைத் துணைக்கு அழைக்கக்கூடாது. நாம் செய்த செயலின் விளைவு என்பதை உணர வேண்டும். ஒவ்வொரு மனிதனும் அவனது செயல்களின் விளைவுகளை அனுபவித்தே ஆக வேண்டும் எனக்கூறிய பெரியார், புராண இதிகாசங்களில் காணப்படும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத விஷயங்களைக் துணிவுடன் சுட்டிக்காட்டி அவற்றைக் களைவதற்கு மேடைதோறும் முழங்கியுள்ளார். இதைப்போல் இங்கர்சால் மதவாதிகளிடம் காணப்பட்ட சமூக சீர்கேடுகளை மூடநம்பிக்கைகளைத் தக்க அறிவியல் ஆதாரங்களுடன் விவாதித்து நிரூபித்து இருப்பதைக் காண முடிகிறது.

இருவரும் எழுதுவதில் அதிகம் ஆர்வம் காட்டாமல் மக்களை நேரடியாகச் சென்று சொற்பொழிவு நிகழ்த்துவதில் அதிகம் முக்கியத்துவம் காட்டியிருப்பதைக் காணமுடிகிறது. இதற்கு படிப்பறிவு இல்லாத மக்களிடம் பகுத்தறிவு சிந்தனை சென்று சேர வேண்டும் என்ற உள்ளார்ந்த சிந்தனை இவர்களிடம் இருந்திருக்கக் கூடும். மேலும், இருவரும் தங்கள் கருத்துகளுக்கு மாறுபட்ட (அ} எதிரான கருத்துக்களைக் கொண்டவர்களிடம் பகைமை பாராட்டவோ, ஆணவத்துடன் நடந்து கொள்ளவோ விருப்பம் இல்லாதவர்களாகத் திகழ்ந்துள்ளனர். அவர்களின் கொள்கைகளுடன், கருத்துக்களுடன் மாறுபட்டு நிற்கின்றோமே ஒழிய மனிதர்களுடன் அல்ல என்பதைத் தெளிவு படுத்தியுள்ளனர்.

பெரியார், மதம் மனிதனை பண்படுத்தவில்லை, மாறாக மனிதன்தான் மதத்தைப் பயன்படுத்தி வருகின்றான். மனிதனின் வளர்ச்சிக்கு ஏற்ப கடவுளும் முன்னேற்றம் அடைகின்றது என்றார். மதம் குறித்து இந்தளவுக்கு இங்கர்சால் சிந்தித்தாக தெரியவில்லை. ஏட்டுக் கல்வியைவிடத் தொழில் கல்வியைப் பெரியார் வலியுறுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. **கல்லூரிகள் கூழாங்கற்களுக்கு மெருகிடுகின்றன வைரங்களை மங்க வைக்கின்றன (சிந்தனையாளர் இங்கர்சால் ப. 171)** என்பது இங்கர்சாலின் கூற்றாக அமைகிறது. கல்வி குறித்த இவர்களின் சிந்தனையானது பொருளாதார ரீதியாக முன்னேற்றத்தைத் தரக்கூடிய பகுத்தறிவை வளர்க்கக் கூடிய கல்வி மக்களுக்குத் தேவை என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

ஆன்மா என்பதெல்லாம் கிடையாது என்பது பெரியாருடைய கூற்றாகத் திகழ்கிறது. ஆனால் பகுத்தறிவை பாழாக்கிய பிறகு ஆன்மாவைக் காக்க வேண்டியதில்லை, ஆன்மாவின் அழியாத் தன்மையை ஏற்றுக் கொண்டவராக இங்கர்சால் இருந்துள்ளார். கிருத்துவ மதத்தை ஏற்றுக் கொண்ட இங்கர்சால் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவற்றைக் கண்டித்தார் இதனால் மதவாதிகளின் கடுமையான கருத்து மோதல்களுக்கு தாக்குதலுக்கும் ஆளானார். மத அமைப்பாக இருப்பினும் மதமற்ற அமைப்பாக இருப்பினும் எதுவும் என் மீது ஆணை செலுத்துவதாக இருக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்துள்ளார். இச்சிந்தனையானது, சுதந்திரத்தையும், சுயமரியாதையையும் எதிர்பார்க்கும் மனிதன் யாருக்கும் பக்தனாய் இருக்க முடியாது என்ற பெரியாரின் சிந்தனையுடன் ஒத்துப்போவதைக் காணமுடிகிறது.

> **இந்த உலகில் மிகவும் சிறந்தது உரிமையேயாகும். இது உணவை விட, உடைமையை விட முக்கியமானதாகும். மேலும் கலையை விட அறிவியலை விட முக்கியமானதாகும். மனிதனின் உரிமை என்பது மதங்களின் அனைத்திலும் மேம்பட்டதாகும்" (சிந்தனையாளர் இங்கர்சால் ப.37).**

ஆண்டவன் மீது அன்பு செலுத்துவதை விட, உனது அருமை குழந்தைகள் மீது அன்பு செலுத்துவது சிறந்ததாகும் அதுவும் ஆயிரம் மடங்கு சிறந்ததாகும்.

இங்கர்சாலின் இக்கூற்றிலிருந்து அடிமை வாழ்வின் அவலத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஒழுக்க கேடுகளுக்கெல்லாம் மதமே காரணம் என்று இங்கர்சால் சிறிது மிகைப்படுத்தி எடுத்துரைக்காமல் இருந்திருந்தால் மற்றவர்கள் மதத்தின் கொடுமைகளைப் பார்த்திருக்க மாட்டார்கள் (சிந்தனையாளர் இங்கர்சால், ப. 84). இங்கர்சாலைப் போன்று பெரியார் கடவுளே இல்லை என்று சிறிது மிகைப்படுத்திக் கூறாது இருந்திருந்தால் இந்திய ஆன்மீகத்தில் கொட்டிக் கிடந்த மூடப்பழக்க வழக்கங்களும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத செயல்களையும் மக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் போயிருக்கும். இருவரிடமும் மக்களின் அறியாமையை அகற்ற சில விஷயங்களை மிகைப்படுத்திச் சொல்லுவதில் தவறில்லை என்ற ஆளுமைப்பண்பு இருந்திருப்பதை அறிய முடிகிறது.

இருவரும் சிறந்த சொற்பொழிவாளர்களாகத் திகழ்ந்துள்ளனர் இலவசமாகச் சொற்பொழிவு நிகழ்த்தாமல் பொருள் பெற்றுக் கொண்டு சொற்பொழிவு நிகழ்த்துவதை வழக்கமாகக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. இது ஒரு வகையில் எதுவுமே இலவசமாக மக்களுக்குக் கொடுப்பது முறையற்றது என்பதை உணர்த்துவதாக அறியமுடிகிறது. இருபது வயதில் இங்கர்சால் ஒரு பள்ளியைத் தொடங்கி தாமே ஆசிரியராக இருந்திருப்பதை அறியமுடிகிறது. அடித்தட்டு மக்களின் கல்வி மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதில் பெரியார் பெரிதும் அக்கறை கொண்டு கல்விநிறுவனம் உருவாக்குவதில் கவனம் செலுத்தியுள்ளார். ஒரு நாடு தன் வலிமைக்கு மீறிய மக்கள் தொகையைப் பெருக்கிக் கொண்டு செல்லும் பொழுது அந்நாடு எப்பொழுதும் நோய் நொடிகளாலும் வறுமையாலும் வாட்டமுற்று இருப்பதோடு தன் இயற்கை அழகையும் முற்போக்கையும் சுயமரியாதையையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறது. மேலும், இதனால் சமூகச் சீர்திருத்தவாதிகள் தங்கள் முற்போக்கிற்கு எவ்வளவு முயன்றும் தோல்வியையே தழுவும் நிலை ஏற்படுகிறது. மேலும், ஒரு நாட்டு மக்கள் மீது இன்னொரு நாட்டு மக்களுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. பொறாமைப் பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. மற்றவர்களை பட்டினியாகப் போட்டால்தான் தாம் வாழ முடியும் என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்பதைப் பெரியார் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார் (தந்தை பெரியாரின் அறிவியல் சிந்தனைகள். ப. 9.) பெரியார் எதையும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக மக்களுக்கு தன் மனதில் பட்டதை வெளிப்படுத்தியுள்ளார். அதற்குப் பல இடர்பாடுகளையும் சந்தித்துள்ளார். அதற்காகத் தான் எடுத்துக் கொண்ட நோக்கத்திலிருந்து கடைசிவரை பின்வாங்காமல் இறுதி மூச்சு வரை பாடுபட்டு இருப்பதை அவருடைய ஆளுமையாக அறிந்து கொள்ள முடிகிறது.

**இரக்கமும் ஈகையும்**

தந்தை பெரியாரும், இங்கர்சாலும் இரக்கக் குணமும், ஈகைப் பண்பும் கொண்டவர்களாக இருந்துள்ளனர். இங்கர்சால் மற்றவர்களுக்கு இன்னல் உண்டாக்குவதைவிட இன்னல்களைத் தான் ஏற்பதைப் பெரிதும் விரும்பியுள்ளார்.

பழிவாங்கும் பண்பு இல்லாதவராகவும், இரக்கக்குணம் உடையவராகவும் திகழ்ந்துள்ளார். பிறருக்கு உதவிசெய்யவேண்டும் என்ற என் ஆர்வத்தை நான் இழப்பதைவிட ஒருவருக்கு உதவியாகக் கொடுக்கும் அப்பொருளை இழப்பதே சிறந்தென கருதுகின்றேன் என்பது இங்கர்சால் கூற்றாக அமைகிறது. பெரியார் மிகவும் எளிய வாழ்க்கை வாழ்ந்தவர், ஆடம்பரங்களை அறவே வெறுத்தவர். ஈரோட்டில் ப்ளேக்நோய் வந்தபோது எல்லோரும் அஞ்சி ஓடினார்கள். ஆனால் தந்தைப் பெரியார் ஊரில் உள்ளவர்களுகுத் துணிவுடன் உதவிசெய்துள்ளார். பொதுகாரியங்களுக்கு தானம் வழங்கியுள்ளார். உதாரணமாகத் திருச்சியில் கல்லூரி உருவாக்கத் தான் வாழ்ந்த இல்லத்தையே தானமாக அளித்துள்ளார். அச்செயல்தான் இன்று ஈ.வெ.ரா கல்லூரியாக திருச்சியில் சிறப்புற்றுத் திதழ்திறது.

**பகுத்தறிவுச்சிந்தனை**

தந்தை பெரியார் மக்களின் மூடநம்பிக்கை, அர்த்தமற்ற சம்பிரதாயம், இழிந்த வழங்கங்கள் ஆகியவற்றுக்கு கடும் எதிரியாகத் திகழ்ந்துள்ளார், இவை தொடர்பான பல மாநாடுகளை நடத்தியுள்ளார். மக்களிடையே சுயமரியாதையும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும் என்று மேடைதோறும் முழங்கியுள்ளார். மேலும், மக்களிடம் பகுத்தறிவு சிந்தனை வளரவேண்டும். இதற்கு பத்திரிக்கைகள் தங்கள் மனசாட்சிக்கு உண்மையென்று பட்டதைத் தைரியமாக பொதுஜனங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென அறிவுறுத்தியிருப்பதைக் காண முடிகிறது. **ஒரு மனிதனின் தேவைக்கே இந்த தேசம் உண்டு என்றால் அந்த தேசம் ஒழிதல் நன்றாம் - பாரதிதாசன் (புரட்சிக் கவியும் இந்தியத் தேசமும், ப. 119).** பெரியார் சிந்தனையின் தாக்கத்தினால் பாரதிதாசன் கவிதைகளில் மனிதாபிமானமும் அறச்சீற்றமும் மேலோங்கி இருப்பதைக் காண முடிகிறது. மக்களின் வீழ்ச்சிக்குரிய காரணங்களைப் பட்டியலிட்டு சமூகச் சிக்கலை வெளிப்படுத்தித் தீர்வு நோக்கிலான புரிதலை வெளிப்படுத்தியிருப்பது சிந்திக்கத் தக்தாக அமைகிறது.

இங்கர்சால் கிருத்துவ மதத்தின் நல்லக்கருத்துக்களை ஏற்றுக்கொண்டுள்ளார்.ஆனால் பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துக்களை ஏற்காமல் மதவாதிகளுடன் கடுமையான மோதல்களில் ஈடுபட்டுயிருப்பதைக் காணமுடிகிறது. அதேசமயம், இங்கர்சால் மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களிடம் பகைமை பாராட்டாமல் காரணகாரியங்களை காணும் பகுத்தறிவு வழியை வலியுறுத்துவதில் முக்கியத்துவம் கொடுத்திருப்பதைக் காணமுடிகிறது. மேலும், இங்கர்சால் தவறான கொள்கைகளை வெறுத்துள்ளார், முட்டாள்தனத்தை ஏளனம் செய்துள்ளார்.ஆனால், ஒரு போதும் தவறான கொள்கைகளைக் கொண்ட மனிதர்களை வெறுக்காத பண்பாளராகத் திகழ்ந்துள்ளார். நேர்மையின்மை, கயமை, சிறுமை போன்றவற்றிற்கு இரையாகும் சக மனிதர்களுக்கு எதிராக ஒருபோதும் வெறுப்பையும் எதிர்ப்பையும் காட்டாதவராகத் திகழ்ந்துள்ளார்.

**மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு அதிகாரத்தை மையப்படுத்துவதிலும் இல்லை, அதைப் போல் அதிகாரத்தை முழுவதும் பரவலாக்குவதிலும் இல்லை. இந்த இரண்டையும் எந்த அளவில் ஆளுகையிலும் நிர்வாகத்திலும் சரியான நிலையில் வைத்துச் செயல்படுகின்றோமோ அந்த அளவில் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். நாட்டில் ஆளுகையும் நிர்வாகமும் ஒத்திசைந்து உணர்வுப் பூர்வமாக நடைபெறும் போது தான் ஒரு மக்களாட்சி ஏற்படுத்த வேண்டிய விளைவுகளை ஏற்படுத்தும் (கூட்டுறவுக் கூட்டாட்சி ஒரு பார்வை, ப. 25).**

இச்சிந்தனை இங்கர்சால் சிந்தனைக்கு வலுசேர்ப்பதாக அமைகிறது.

**சமயச்சார்பற்றச் சிந்தனை**

தந்தை பெரியார் அனைத்து சமயத்திலும் நிலவிய மூடநம்பிக்கைகளை அஞ்சாமல் மேடைதோறும் பேசியுள்ளார்.அதற்கு அவர் சிறைக்குச்செல்லவும் தயங்கவில்லை. சுயமரியாதை இயக்கத்தின் வாயிலாக, பல சமயத்தலைவர்களின் எதிர்ப்பை எதிர்கொண்டார். பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். சமயச்சீர்கேட்டை எதிர்ப்பது மட்டும் சுயமரியாதை அல்ல. ஒரு சமூகத்திற்குப் பொருளாதாரமும் அரசியலும் மிக அவசியம் என்பதை மக்களிடம் புரியவைத்தார். இங்கர்சால் மக்களிடம் சமயச் சார்பற்றச் சிந்தனையை உருவாக்க அயராது உழைத்துள்ளார். மேலும், நீதி, கல்வி, உழைப்பு ஆகியவை புதிய வளமான உலகை மக்களுக்கு அளிக்கும் என்று உறுதியாக நம்பியுள்ளார். இருள் என்பது எங்கும் இல்லை அறியாமையென்பதில் தான் இருக்கிறது என்ற சேக்ஸ்பியரின் சிந்தனைக்யிணங்க இருவரும் வாழ்ந்திருப்பதை அறியமுடிகிறது. மேலும்,

**வணிகப் பண்பாட்டுப் பொருளாதார நடவடிக்கை புறநிலையில் சாதி, மதம், இனம் கடந்ததாகவும் அரசியலற்றதாகவும் தோற்றம் தரும். ஆனால் அகநிலையில் சாதி, மதம், இனம் இவை அனைத்தையும் அரவணைத்து ஆதரவளிப்பதோடு ஒரு நாட்டின் அரசியல் மாற்றங்களுக்கும் காரணியாக விளங்கும். அரசின் ஆதரவும் அரசு சார்ந்த, சாராத வங்கிகள் ஆதரவும் இருப்பதால் முதலாளித்துவ உற்பத்தியாளர்களும் வணிகர்களும் சமூக, பண்பாட்டு ஆதிக்கர்ளாக மாறி பண்பாட்டின் பயணத் திசையைத் தீர்மானிப் பவர்களாக விளங்குகின்றனர் (பண்பாட்டுப் பொருளாதாரம்: கருத்தியல் உரையாடல். ப. 34).**

இக்கருத்தியலானது, பெரியாரின் கருத்தியலுக்கு வலுசேர்ப்பதாக அமைகிறது.

**பெண்ணுரிமைச் சிந்தனை**

ஆணாதிக்கமே பெண்ணடிமைத்தனத்தை உருவாக்குகிறது. இது குறித்து ஆழமான சிந்தனைப் பகிர்வுக்குப் *பெண் ஏன் அடிமையானாள்*? என்ற நூலில் பெரியார் விவரித்துள்ளார். பெண்கள் கல்வி பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்துள்ளார். மனிதநேய அடிப்படையில் கல்வி அமையவேண்டும். தொழில் நோக்கம், அறிவு நோக்கம் இருக்க

வேண்டும். எல்லோருக்கும் கல்வி, மதம் சாராக்கல்வி, பெண்கல்வி அவசியம், சமூகக் கல்வியை பெரியார் பெரிதும் வற்புறுத்தியுள்ளார். உரிமைக்குப் போராடுதல், மதக்கல்வி மறுப்பு ஆகியவை பெரியாரின் பன்முகப்பார்வையை அறிந்து கொள்ளத் துணைபுரிகின்றன.

இங்கர்சால் பெண்களுக்குச் சம உரிமை வழங்க வேண்டும். இல்லறத்தில் சமத்துவமும், மக்களாட்சித் தன்மையும் நிலவ வேண்டும். பெற்றோர் பிள்ளைகளிடத்தில் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்தியுள்ளார். மதத்தின் அடிப்படையில் பெண்களை அடக்கி ஒடுக்குதல் கூடாது, அறிவியல் மட்டுமே நம் வாழ்க்கையைப் பண்படுத்த கூடியது. மதச் சடங்குகள் அல்ல என்பதை மக்களுக்கு உணர்த்தியுள்ளார். அறிவியல் தான் நமக்கு உய்யும் வழியைக் காட்டக் கூடியது, வறுமையையும், குற்றத்தையும் ஒழிக்கக் கூடியது. மேலும் சமய சார்பற்ற சிந்தனை, நீதி, கல்வி, உழைப்பு ஆகியவை நமக்குப் புதிய வளமான உலகை அளிக்கும். இருள் என்பது வேறு எங்கும் இல்லை, அறியாமை என்பதில்தான் இருக்கிறது. ஆணுக்குள்ள உரிமை பெண்ணுக்கு இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே உண்மயாளனாக, நேர்மையாளனாக இருக்க வேண்டும் என்பதை இங்கர்சால் தான் பேசும் மேடைதோறும் பதிவு செய்திருப்பதைக் காணமுடிகிறது. அனைத்து வகையிலும் மனித உரிமைகளை நிலைநாட்டுவதே பெரியாரின் இலட்சியமாக இருந்துள்ளது. சமத்துவத்தை அனைத்தளவிலும் நிலைபெறச் செய்யச் பாடுபட்டுள்ளார். இனம், மொழி, சாதி, பால் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாட்டைக் களைதல், விரும்பியதைத் தேர்வு செய்து கொள்ளுதல் ஆகியவற்றிற்குப் பெரியார் சிந்தித்தார், பிரச்சாரம் செய்தார், போராடினார், சட்டவடிவம் தரக்கோரினார். இறுதி மூச்சுவரை குரல் கொடுத்துள்ளார். மேலும்,சுயமரியாதை ஒவ்வொரு மனிதரும் பெறத்தக்க உயர்பண்பு என்பதை சுட்டிக்காட்டிய தந்தை பெரியார் **24.12.1973 -** ல் இயற்கை எய்தினார்.

இங்கர்சால் தனக்கு முன் வாழ்ந்த அறிஞர்களைவிட, மனிதனின் மனதில் உள்ள மூடநம்பிக்கை, அறியாமை, காழ்ப்புணர்ச்சி, சமுதாய வெறுப்பு, இனவெறுப்பு, கொடுங்கோன்மை, தவறான உணர்ச்சிகள், தவறான மனப்பாங்கு ஆகியற்றை பெரும் துணிச்சலோடு எதிர்த்துப் போராடியுள்ளார்.

> **ஒரு கலாச்சாரம் ஆரோக்கியமானதாக இருக்குமெனில் அது தனது அறிவை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு எளிதில் கடத்தும். ஒவ்வொரு தலைமுறையின் அறிவை அடுத்த தலைமுறை பெற்று அதிலிருந்து இன்னும் ஆழ்ந்த பொருளைக் காண வேண்டும். இப்படி இடையறாது இயங்கிக் கொண்டே இருக்கும் ஒரு சமூகத்தில் தான் அறிவியல் உச்சம் தொடும். (வேதம் என்றோர் அறிவியல்).**

இச் சிந்தனையானது இங்கர்சாலின் சிந்தனைக்கு வலு சேர்ப்பதாகவும் மிகவும் கவனத்துக்குரிய ஒன்றாகவும் அமைகிறது. இங்கர்சால் தனது இறுதிக் காலத்தை நியூயார்க்கில் கழித்தார். கட்சன் நதியின் மிக அழகான இடங்களில் ஒன்றான டோச்பொரி கிராமத்தின்

அருகிலுள்ள வாட்சன் சென்று கோடையில் வாழ்ந்து வந்தார். வாட்சன் என்னும் அவரது கோடைக்கால இல்லத்தில் 1899 - ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் நாள் இயற்கை எய்தியுள்ளார். இவரின் இறுதிச் சொற்கள் நான் இப்பொழுது நலமாக இருக்கின்றேன் என்பதாக அமைகிறது.

**நிறைவுரை**

இங்கர்சால், பெரியார் இருவரும் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். இங்கர்சால் போராட்டம் என்ற நிலையிலிருந்து மாறுபட்டு மக்களுக்கு அறிவுறுத்தல், தீமைகளைச் சுட்டிக்காட்டல் என மென்மையான அணுகுமுறையைக் கையாண்டுள்ளார். பெரியார் தன்னுடன், தனது குடும்பத்தாரை இயக்கத்தில் சேர்த்து பொதுமக்கள் நலனுக்காக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து சிறைசென்றுள்ளார். இங்கர்சால் முறையாகக் கல்வி பயின்று, வழக்கறிஞர் பட்டம் பெற்று வழக்கறிஞராகத் தொழில் செய்துள்ளார். பெரியார் பத்து வயதில் திண்ணைப் பள்ளிப் படிப்புடன் முறைசாராக் கல்வி முடித்து, அதன்பிறகு அவர் சுயமாகத் தன்னை வளர்த்துக்கொண்டு பகுத்தறிவு மேதையாகத் திகழ்ந்துள்ளார்.. பெரியார் தனது கருத்துக்களையும், போராட்டங்களையும், இயக்கத்தின் வாயிலாக முன்னெடுத்துச் சென்றுள்ளார். ஆனால் இங்கர்சால் தன்னந்தனியாக நின்று தனது கருத்துக்களை முன் வைத்துள்ளார். சமுதாயம் மாற்றம் என்பது சட்டத்தினால் மட்டும் ஏற்படக்கூடியது அல்ல, போராட வேண்டும் என்று போராடிச் சிறைச் சென்றவராகத் திகழ்கிறார் பெரியார். பெரியார் எந்த பிரச்சனையிலும், தீரத்துடனும், வீரத்துடனும், தீவிரமான அணுகுமுறையைப் கையாண்டுள்ளார். ஆனால் இங்கர்சால் குடும்பத்தாரை ஈடுபடுத்தவில்லை. இருவரும் இரக்கமும் ஈகையும் கொண்டவர்களாக திகழ்ந்துள்ளனர். இருவரின் சமூக சிந்தனைகளும் அதிகார வர்க்கங்களின் அடக்குமுறைகளை எதிர்ப்பது, மக்களை விழிப்புணர்வு அடையச் செய்வது என்ற ஒற்றைப்புள்ளியல் அமைகிறது.

**பயன்பட்ட நூல்கள்**

[1] அறவேந்தன், இரா. *தாய்க்கோழி பெரியார் இலக்கியம்.* காவியா பதிப்பகம், சென்னை - 620024, 2013.

[2] கோதை ஜோதிலட்சுமி. *வேதம் என்றோர் அறிவியல். தினமணி* நாளிதழ், 20 - 01 -2023.

[3] சாமிநாத சர்மா, வெ. *மானிட ஜாதியின் சுதந்திரம்* (இங்கர்சால்). தமிழ் நிலையம், தியாகராய நகர், சென்னை-600017, 2007.

[4] சிதம்பரனார், சாமி. *தமிழர் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா.* சிப்பி புக்ஸ், சென்னை – 600017, 2007.

[5] சிவசுப்பிரமணியன், ஆ. *வர்க்க போராட்டமும் பண்பாட்டுப் போராட்டமும். மணற்கேணி* ஆய்வு வெளி, இதழ் - 65, ஜனவரி - 2024.

[6] செங்குட்டுவன், ப. *சிந்தனையாளர் இங்கர்சால்* (தமிழாக்கம்), ஸ்ரீ செண்பகா பதிப்பகம் சென்னை - 17, முதல் பதிப்பு - 2005.

[7] பழனி துரை, க. *கூட்டுறவுக் கூட்டாட்சி ஒரு பார்வை. நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்,* மலர். 14, இதழ் - 9. டிசம்பர்- 2022.

[8] பழனி துரை, க. *அம்பேத்கர் - குமரப்பா கருத்தியலின் நடைமுறைச் சாத்தியம். நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்,* மலர்- 14, இதழ் - 11, பிப்ரவரி - 2023.

[9] புதிய மாதவி. *புரட்சிக் கவியும் இந்தியத் தேசமும். மணற்கேணி* ஆய்வு வெளி, இதழ் – 64, நவம்பர் - 2023.

[10] மழுவை புரட்சிதாசன். *தந்தை பெரியாரின் சமுதாய சிந்தனைகள்.* கற்பகம் புத்தகாலயம், சென்னை-600017, 2019.

[11] முத்தையா, இ. “பண்பாட்டுப் பொருளாதாரம்: கருத்தியல் உரையாடல்.” *பெயல்* அரையாண்டு ஆய்விதழ், பெயல்: 10, துளி: 01, அக்டோபர் 2023 – மார்ச் 2024.

[12] வேலுச்சாமி, ந. *தந்தை பெரியாரின் அறிவியல் சிந்தனைகள்.* தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்- 613010, 2009.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

CC BY இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.